உ

ஓம்

பரப்பிரஹ்மணே நம:

ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி 5 } இரௌத்திரி ௵ ஆனி௴ ௧௨௳ / 1920 ௵ ஜூன்௴ 14௳ { பகுதி 12

கடவுள் வணக்கம்.

உடல்குழைய வென்பெலா நெக்குருக விழிநீர்க
　　ளூற்றென வெதும்பி யூற்ற
வாசிகாந் தத்தினைக் கண்டணுகல் போலவே
　　யோருறவு முன்னி யுன்னிப்
படபடென நெஞ்சம் பதைத்துண் ணடுக்குறப்
　　பாடியா டிக்குதித் துப்
பனிமதி முகத்திலே நிலவனைய புன்னகை
　　பரப்பியார்த் தார்த் தெழுந்து
மடலவிழு மலரனைய கைவிரித் துக்கூப்பி
　　வானே யவானி லின்ப
மழையே மழைத்தாரை வெள்ளமே நீடூழி
　　வாழியென வாழ்த்தி யேத்தும்
கடன்மடை திறந்தனைய வன்பரன் புக்கெளியை
　　கன்னெஞ்ச னுக்கெளி யையோ
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
　　கருணா கரக்க டவுளே.

தினமே செலச்செல வாழ்நாளு நீங்கச் செகத்திருள்சொற்
பனமே யெனவெளி கண்டே யிருக்கவும் பாசபந்த
வினமே துணையென் றிருந்தோ நமன்வரி னென்செய்குவோ
மனமேநம் போலவுண் டோசுத்த மூடரிவ் வையகத்தே.

கள்ளம் பொருந்து மடநெஞ்ச மேகொடுங் காலர்வந்தா
லுள்ளன் பவர்கட்குண் டோவில்லை யேயுல கீன்றவன்னை
வள்ளம் பொருந்து மலரடி காணமன் றூடுமின்ப
வெள்ளச்செம் பாதப் புணையேயல் லாற்கதி வேறில்லையே,

ஆனந்தபோதினி

இரௌத்திரி ௵ ஆனி௴ ௧௨

மதக்குறி யணிதல்.

நண்பர்களாகிய சகோதர சகோதரிகளே! இந்துக்களாகிய நாம் நமது மதாசாரத்தின்படி நெற்றியில் பலவித மதக்குறிகளை யணிகிறோம். அக்குறி அவரவர்கள் மத உட்பிரிவின்படி உபாசிக்கும் மூர்த்தங்களுக்குத் தக்கபடி வெவ்வேறாகவிருக்கின்றன. சிவத்தைக் கடவுளாகக் கொண்ட சைவர் விபூதியையும், விஷ்ணுவை யுபாசிப்போர் திருமண்ணையும், ஊர்த்த பிண்டத்தையும், சத்தியைப் பூசிப்போர் குங்குமத்தையும் அணிகின்றனர். இவ்வாறு நம்மவர் வெவ்வேறான உருவங்களைக் கடவுளர் என்று பூசித்தாலும், கடவுள் நாமரூபமற்ற ஒருவரே என்றும், அவர் ஒருவருக்கே இந்த எல்லா உருவங்களும் கற்பிக்கப் பட்டிருக்கின்றன வென்றும், இவ்வாறு கற்பிக்கப்பட்டிருப்பது கடவுளிடத்தில் பக்திபெருகுவதற்கும் மனம் ஒரே இடத்தில் ஒடுங்கிநிற்பதற்குமே என்றும், மனோ ஒடுக்கம் பெற்ற அறிவாளிகள் இச் *சகுணஉபாசனையை விட்டு நிர்க்குண உபாசனையையே செய்து மோக்ஷத்தை யடைகிறார்களென்றும், ஆகையால் நமது வேதப்படி உண்மையில் கடவுள் ஒருவரே யென்றும் நம்மவர் யாவரும் அறிவார்கள். ஆனால் நமது மதத்தின் உண்மையை யறியாதோரும், 'நமது மதமே உண்மை; மற்ற மதங்களெல்லாம் பொய்; நமது மதத்தில் மட்டுமே மோக்ஷமுண்டு' என்று கூறும் அஞ்ஞான வைராக்கிய முடையோரும் நாம் பல தெய்வங்களை வணங்குவதாகவும், கல் உலோகங்கள் இவற்றால் செய்த உருவங்களைக் கடவுளென்று வணங்குவதாகவும் தவறாகக் கருதுகிறார்கள்.

அந்தோ! நம்மவரிற் சிலரே விக்கிரகாராதனையை நிந்திக்கிறார்கள். இவர்கள் அவ்வாறு செய்வதற்குக் காரணம் அன்னியமதத்தார் அதைச்சுட்டி நம்மதத்திற் குற்றங் கூறுகிறார்களே அதற்கென்ன பதில் கூறுவது என்று அவர்களுக்கு விடைகூறத் தெரியாமலோ,

* சகுண உபாசனை = கடவுளை ஒரு உருவமாகப் பாவித்துப்பூசித்தல். நிர்க்குண உபாசனை = கடவுளை அருவமாகப் பூசித்தல்.

பிராம்மணருக்கு ஏன் காசுகொடுக்கவேண்டும், கோயில்களில் அவர்களைக்கொண்டே ஏன் பூசைநடத்தவேண்டும், கலியாணம் முதலியவைகளையும் ஏன் அவர்களைக் கொண்டு நடத்த வேண்டும் என்ற எண்ணத்தாலோ நமக்குப் புலப்படவில்லை. நமது வேதத்திலும், ஆன்றோர்கள் நூல்களிலும் ஞானத்தைப்பற்றிப் போதிக்குங்கால் சரியை கிரியைகளை இழித்துக் கூறுவதையே இவர்கள் தங்கள் கூற்றுக்கு ஆதாரமாகக்காட்டுகிறார்கள். மேடைமேல் ஏற விரும்பியவன் ஏணியின் பனிரண்டுபடிகளில் இரண்டு மூன்றுபடிகள் ஏறி அங்கேயே நின்றிருந்தால், அவனைநோக்கியொருவன் "இப்படிகளில் நீ நிற்பதில் ஒரு பயனுமில்லை. மேல்படிகளில் ஏறிச்செல்" என்று கூறுவதுபோலும், ஒரு மாணவன் லோயர்ஸகண்டெரி பரீக்ஷை செய்ய வாசிக்கத் தொடங்கியவன், முதல்பாடம் இரண்டாம்பாடங்களையே வருடக்கணக்காய் வாசித்துக் கொண்டிருந்தால், அவனைப் பார்க்கும் ஒருவன் " அடே முட்டாள்! நீ இப்பாடங்களைப் படிப்பது மூடத்தனம், பரீட்சைக்கு வைத்திருக்கும் பாட புத்தகத்தைப் படித்தாலன்றி பரீட்சையில் தேறமாட்டாய்" என்று கூறுவதுபோலுமே பரியோர் ஞானத்தைப் போதிக்குமிடத்தில் சரியை கிரியைகளைத் தாழ்த்திக் கூறியிருக்கிறார்கள். சில அறிவிலிகள் பட்டினத்தடிகள் "கல்லிலும் செம்பிலுமோ விருப்பான் எங்கள் கண்ணுதலே" என்று கூறியதை மேற்படி தூஷணைக்கு ஒரு பெரிய ஆதாரமாகக் கூறுகிறார்கள். வயிறுநிறைய அன்னமுண்ட ஒருவனை நோக்கி ஒரு பெரியவர் "இன்னும் ஒரு பிடியன்னம் உண்டால் வியாதியடைவாய்" என்றால், அதைக் கேட்டதும் நாம் அன்னமுண்டால் நோய் வரும் ஆதலால் சாப்பிடவேகூடாது என்று தீர்மானித்துக் கொள்ளும் மூன்றாவது மனிதன் மூடத்தனம் போன்றதே இவர்கள் கருதும் அர்த்தமும். அப்பாசுரத்தைக் கூறும்போதும் அவ்வடிகள் ஸ்தலயாத்திரை செய்துகொண்டுதா னிருந்தார் என்பதை யுணர்ந்தால் அவர் கூறியகருத்து இன்னதென விளங்கும்.

நமது வேதத்தில் கூறப்பட்டதும் நம் முன்னோர்கள்முதல் அனுசரித்து வருவதுமாகிய சரியை கிரியைகள் எவ்வாறு நற்பயனை யளிக்கத்தக்கவைகளாக விருக்கின்றனவோ, அவ்வாறே நாம் மதக்குறியணியும் கொள்கையும் நற்பயனையே யளிப்பதாக விருக்கின்றது.

பிறந்து அறிவுவந்தது முதல் உலக போகங்களிலேயே உழன்று கொண்டு எந்நேரமும் பொருளுக்காக உழைப்பதிலும், அப்பொருளைக்கொண்டு உண்டுடுத்து உறங்குவதிலுமே வாணாளை வீணே கழிக்கும் மானிடமாக்கள் ஆண்டவனை எப்போதோ ஒரு காலத்தில் சிந்திப்பதேயரிதாக விருக்கிறது. மனமென்னும் பட்டி எருதோ இச்சையென்னும் மூக்கணாங்கயிறு எப்பக்கம் இழுக்கிறதோ அங்கெல்லாம் சென்று சதா அலையும் சுபாவமுடைத்து. அதன் நாட்டம்

முழுதும் ஐம்புல நுகர்ச்சியைக் கிளப்பி வினைப்பயிர் விளைவிக்கும் நாமரூபப் பொருள்களிலேயே செல்லும் பழக்கமுடையது. ஒரு தோட்டத்தில் மா பலா முதலிய உயர்ந்த கனி வகைகளெல்லாம் இருக்க அவற்றை யெல்லாம் விட்டு வேப்பங் கனியையே விரும்பும் காகத்தைப் போன்றும், தெளிந்த நீரைவிட்டுச் சேற்றில் புரளவே விரும்பும் மகிடம் போலும் இம்மனமானது என்றும் நீங்காததும் துக்கக் கலப்பில்லாததுமாகிய ஆனந்தப் பேற்றையளிக்கும் அம்பலக்கூத்தனை யகத்துன்னாது அற்பசுகம் உள்ளதுபோற் காட்டி மிக்க துன்பங்களையும் தீவினைகளையுமே யளிக்கும் சிற்றின்ப போகங்களையே சிந்தித்துக்கொண் டிருக்கும்.

இத்தகைய மனதிற்கு நீ இன்னின்ன காலங்களில் கடவுளைத் துதி என்று விதி ஏற்படுத்துவது மட்டும் போதாது. ஏனெனில் அவற்றைக்கூட அடிக்கடி மறந்துவிடும். இவையாவும் யோசித்தே சகல கலாவல்லவர்களும் மெய்ஞ்ஞானிகளுமாகிய நம்முன்னோர், வெறும் ஔடதத்தை யளித்தால் புசிக்க விரும்பாத குழந்தைக்குத் தின்னும் தீம்பண்டங்களில் அந்த ஔடதத்தைமறைத்து வைத்துக் கொடுப்பதுபோல், மனம் வேடிக்கையாக ஐம்புலன் வழிகளால் சுகத்தை யனுபவிக்கும் மார்க்கங்களின் மூலமாகவே கடவுளைப் பன்முறை சிந்திக்கவும் தோத்திரம் செய்யவும் பழகும் வண்ணம் இந்த ஏற்பாடுகளை யெல்லாம் விதித்திருக்கிறார்கள். திருட்டாந்தமாக ஒன்றுகூறுகிறோம்: கடவுளின் பூரணஅருளைப் பெறவிரும்புகிறவன், அவரை உண்மைப்படி யறியக் கருதுகிறவன் அவரைத் தனக்கு அன்னியமாகவே நினைக்கான் என்று ஆன்றோர் கூறியுள்ளர்; இப்போது 'திருவொற்றியூரில் இன்று பதினெட்டு நடனங்கள்' என்றால் எத்தனை ஆயிரம் பேர் நடந்து போயேனும் அங்கு கும்புகூடி விடுகிறார்கள் பாருங்கள். அங்கு சுவாமிக்குச் சுகந்த புஷ்பங்களாலும், விலைமதிக்கொணாத நவரத்ன ஆபரணாதிகளாலும் அலங்காரம் செய்யப்பட்டிருப்பதும், அவர் நடிப்பதுமாகிய கண்ணுக் கானந்தம் விளைவிக்கும் காக்ஷிகளும், செவிக்கினிய சங்கீத வாத்தியங்களும், வேறு பலவித வேடிக்கைகளும், நாவுக்கினிய பலகார வர்க்கங்கள் பழவர்க்கங்கள் விற்கும் கடைகளும், ஆகிய இவைகளெல்லாம் அங்கு இல்லாவிட்டால், அந்தோ ! நடராஜர் எப்படியிருக்கிறார் என்று யுகத்திற் கொருமுறையேனும் எவராவது பார்க்கச் செல்வார்களோ? இல்லை. தங்கள் இந்திரியங்களுக்கு இன்பமளிக்கும் பொருள்கள் அங்குளதால், சாமியைப் பார்க்கப் போகிறோம், என்று கூறிக்கொண்டு செல்லப் புறப்படுவது முதல் திரும்பி வீடுவந்து சேர்ந்து நெடுநேரம் வரையில் சாமிஎன்ற சிந்தனையோடும் சாமியைப்பற்றிய சம்பாஷணையோடு மிருக்கிறார்கள். அனேகர் அச்சமயம் தானதருமங்களைச் செய்வதற்கு சந்தர்ப்பமும் வாய்க்கிறது.

என்றே நடனம் செய்யும் நடராஜரைக்காண இவ்வளவு சிரமம் எடுத்துக் கொள்கிறார்களே, சதா ஆனந்தத் தாண்டவம் புரியும் நடராஜனது கோயில், அடியெடுத்து வைக்கவே அவசியமில்லாத அவ்வளவு சமீபத்திலிருந்தாலும், சற்று நேரம் உட்கார்ந்து அவர் நடனத்தைக்காண முயற்சி செய்யும்படி வேண்டினாலும், ஆயிரத்தில் ஒருவரேனும் அதற்குப் பிரியப்படுவார்களோ? இப்படிப்பட்ட நம்மை மேற்கண்டவாறேனும் ஆண்டவனைச் சிந்திக்கவும் அவன் திருவிளையாடல்களைப்பற்றிப் பேசவும் செய்யும் ஏற்பாடுகளை இழிவுபடுத்திக் கூறுவது அறிவாளிகள் செய்கை யன்றென்பது நன்குவிளங்கும்.

இது போலவே ஆண்டவனைப்பற்றி சிந்தித்துத் துதிக்கவும், மோக்ஷமார்க்கம் நூல்களில் கூறப்பட்டிருப்பினும், கல்வியறிவில்லார்க்கும் அது சிலவற்றால் ஒருவரால் ஒருவர்க்கு வாயால் அறிவிக்கப்படும் வண்ணம் கோயில்கள், மதக்குறிகள் முதலியவை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. கோயிலில் ஐந்து பிரகாரணங்களிருக்கின்றன. அவற்றைக் காணும் ஒருவன் "ஏன் ஐந்து பிரகாரணங்கள் இருக்கின்றன?" என்று வேறொருவனை விசாரித்தால், கீழ்க்காணும் விடை அவனுக்குக் கிடைக்கிறது.

"கோயில் நமது தேகத்திற்குத் திருட்டாந்தம். கோயிலுக்குள் கடவுளின் சொரூபம் வைக்கப்பட்டிருக்கும் குறி, நம் தேகத்திற்குள் (உள்ளத்தில்) ஆண்டவன் இருக்கிறார் என்று நாம் அறிந்து கொள்வதற்காகவே ஏற்படுத்தப்பட்டது. கோயிலிலுள்ள ஐந்து பிரகாரணங்களும் நம் தேகத்திலுள்ள பஞ்சகோசங்களைக் குறிக்கின்றன. அப்பஞ்சகோசங்கள் நம் ஆன்மாவை மூடிக்கொண்டிருக்கின்றன. நாம் அவற்றினின்றும் வெளிப்பட்டால் ஆண்டவனையறியலாம் என்று உணரும்பொருட்டே இப்படிக் கட்டப்பட்டிருக்கிறது"

இதற்குமேல் பஞ்சகோசங்கள் என்றால் என்ன? அவற்றை விட்டு வெளிப்படல் எவ்வண்ணம்? என்பன வாதிகளை யவன் விசாரித்தறிந்தால் மோக்ஷத்தை யடையும் மார்க்கத்தை யுணர்ந்தவனாகிறான்.

சகோதர சகோதரிகளே! இனி நாம் 'நெற்றியிலணியும் மதக்குறிகள் எதை விளக்குகின்றன? அவற்றால் என்ன பயன்?' என்பவைகளைப்பற்றிச் சுருக்கமாகக்கூறி இவ்விஷயத்தை முடிப்பாம். மதக்குறிகளை முக்கியமாக நெற்றியிலணிவது சுழிமுனை (புருவங்களின் மையஸ்தானம்) என்ற விடத்தில் ஆன்மா தன் பூரணப் பிரகாசத்தோடு ஜொலித்துக்கொண்டிருக்கிறது என்பதை யுணரும் பொருட்டே.

வேதத்தில் வெண்குறி யணிதல் மோக்ஷ இச்சையைக் குறிக்கும் என்றும், மஞ்சள் நிறமணிவது தேவலோகஇச்சையைக்குறிக்கு

மென்றும், சிவப்புக்குறி இகலோக இச்சையைக் குறிக்குமென்றும் கூறப்பட்டிருக்கிறது. இக்குறிகளைத் தினம் அணிந்துகொள்ள வேண்டுமென்றும் அப்படி யணிந்து கொள்ளும்போது தேகசுத்தி செய்துகொண்டு பஞ்சாக்ஷரமோ அஷ்டாக்ஷரமோ ஓதவேண்டு மென்றும் அறிஞர் விதி ஏற்படுத்தி யிருக்கிறார்கள். காலையில் எழுந்த வுடன், பிறகு ஸ்நானம் செய்தபின், போசனத்திற்குமுன், போஜனம் முடிந்தபின், நித்திரைக்குப் போகும்போது, நித்திரைவிட்டெழுந்த போது, மலசல விசர்ச்சனம்செய்து சுத்திசெய்து கொண்டபோது, கோயிலுக்குச் செல்லும்போது, இக்காலங்களிலெல்லாம் விபூதியை யணிந்து கொள்ளவேண்டுமென்று விதி அமைக்கப்பட்டிருக்கிறது. நண்பர்களே! இதனால் ஒருவன் தினம் எத்தனை முறை கடவுளை நினைத்துத் துதிக்கவேண்டியவனாக விருக்கிறான் என்பதைத் தயவு செய்து சிந்தித்துப் பாருங்கள். ஒருவனுடைய சுகதுக்கங்கள் எப் படியிருந்தாலும், அவன் தினம் பன்முறை கடவுளைச் சிந்திக்கிறான். எங்கேனும் சென்றுகொண்டிருக்கையில் வழியில் ஒரு கோயிலைக் கண்டாலும், விழா நடக்கும்போது கடவுள் மூர்த்தம் வெளியில் பவனி வருவதைக்காணினும் கடவுளைச் சிந்தித்துத் துதிக்கிறான்.

இவையன்றி இக்குறிகள் ஆன்மார்த்தத்திற் கனுகூலமான இர கசியங்களை வெளியிடுகின்றன. கல்வி யறி வில்லாதவனும் விசாரிப் பதால் மோக்ஷமார்க்கம் இன்னதென்பதையே அறிந்துகொள்ள லாம். சுருக்கமாக ஒரு திருட்டாந்தம் மட்டும் கூறுவாம்.

"விபூதி ஏன் அணிவது?" என்ற கேள்வியால் பின்வரும் விஷ யங்கள் வெளியாகின்றன. விபூதியின் வெண்மை நிறம்சுத்தசத்துவ குணத்தைக் குறிக்கிறது. பரமசிவன் தேகமுழுதும் விபூதி தூள ணம் செய்துகொண் டிருக்கிறார் என்பது அவர் சத்துவ சொரூபி என்று அறிவிக்கிறது. பசுவின் மலத்தை அக்கினியில் தகித்தால் வெண்மையான விபூதி யுண்டாகிறது. இதிலடங்கியுள்ள அந்தரார்த் தம் பின் வருமாறு :—

பசு என்றால் பாசத்தோடு சம்பந்தப்பட்ட சீவன் என்பது பொருள். இச்சீவனுக்கு ஆணவம், காமியம், மாயை என்ற மும்மல ங்கள் உண்டு. இவையே மோக்ஷமடைவதற்கு இடையூறாக வுள்ளவை. பசுவாகிய இச்சீவனுடைய மேற்படி மும்மலங்களை ஞானமாகிய அக்கினியால் தகித்தால் பரிசுத்தமான மோக்ஷத்தை யடைவாய் என்றபொருள் இதில் அடங்கி யிருக்கிறது. இன்னும் இதை விவரமாய் அறிந்துகொண்டால் ஒருவன்மோக்ஷமார்க்கத்தை யுணர்ந்தவனாவான். திருமண் முதலியவைகளிலும் இவ்வாறே அரிய கருத்துகள் அடங்கியிருக்கின்றன. இக்குறிகளன்றி உருத்திராக் கம் துளசிமணி முதலிய சின்னங்களும் உண்டு. மேற்படி குறிகளை யழகு கருதி அணியலாகா தென்றும், அவற்றில் வாசனைத் திரவியங்

களைக் கலந்து அணியலாகாதென்றும் அப்படிச்செய்வதால் பாபமே சம்பவிக்குமென்றும் கடினமான விதிகளுண்டு. இவ்வாறே உருத்திராக்கம் முதலிய சின்னங்களின் மேல் பொன் முதலிய உலோகங்களையும் இரத்தினங்களையும் பதித்து அழகுக்காக அணியலாகாதென்று விதி யிருக்கிறது. இக்காலத்தில் சந்நியாசி யென்று வெளிவந்தோரிலேயே பலர் இந்த விதிக்குமாறாக நடக்கிறார்களெனின், இல்லறத்தாரைப்பற்றி நாம் பேசவேண்டுவதே யில்லை. நமது மாதரணியும் சின்னங்களாலும் நன்மையே யுண்டு. விரிக்கிற் பெருகும்.

சகோதர சகோதரிகளே! இத்தகைய நன்மைகளையளிக்கும் நமது மதக்குறிகளை யலட்சியம் செய்வோர்களை யறிவிலிகளென்றே கருதவேண்டு மல்லவோ. இக்காலத்தில் நமது மக்கள் பல விஷயங்களில் கெட்டவழியில் பழகுவதுபோல்இதிலும் நடந்துகொள்கிறார்கள். பெற்றோர்கள் இதைக் கவனித்து அவர்களுக்கு நற்புத்தி புகட்டவேண்டியது அவர்கள்கடமை. கருணாநிதியாகிய பரம்பொருள் இவ்விஷயத்தில் நம்மவர்க்கு நல்லறிவளிக்க வேண்டுமாய்ப் பிரார்த்திப்போமாக.

ஓம்தத்ஸத்.

ஸங்கீத சாஸ்திரம்.

தண்கடலை யாடையாக உடுத்த இப்பூவுலகின்கண் சனித்த மானிட ஜன்மம் அறியவேண்டிய விஷயங்களில் சங்கீதமும் பெரிய ஒரு சாத்திரமே யாகும்.

பொதுவாய் ஸங்கீதம் விரும்பாதவர் மிகச் சிலரே. மிருகங்கள்கூட கானத்தைக்கேட்டால் பரவசமடைகின்றன. நம்தேசத்தில் சிலர் பாம்பு முதலிய துஷ்ட ஜெந்துக்களைப் பாட்டினால், தம்வசமாக்கிப் பிடிப்பதை நாளைக்கும் காணலாம். அதுபற்றியே ஓர் ஆங்கிலக்கவி "ஸங்கீதத்தை வெறுக்கும் மனிதன் ஒருவன் இருந்தால் அவன் மகா கடின நெஞ்சன்; அவன் கபடமுள்ளவன்" என்றார். நாம் எவ்வளவு துயரத்துடனிருந்தாலும், கோபத்துடனிருந்தாலும், கானம் கொஞ்சம் காதில் பட்ட மாத்திரத்தில் ஒரு விநாடியாவது மனது அதை மறந்து வயப்படுவது அனுபவம். யோகிகளுக்கு மனது அடங்காமலிருந்தால் அதை ஒருவழிப்படுத்தச் சொல்லியிருக்கும் மார்க்கங்களில் ஸங்கீதமும் ஒன்று. அதனாலன்றோ சிறுகுழவிகள்கூட பாட்டுப்பாடினால் உறங்குகின்றன. நாதத்தின் காரியமாகிய சங்கீதத்திற்கு அரிய சக்திகளுண்டென்பது அறிவாளிகளறிந்த விஷயம். கடவுளரே அதை விரும்பி அதனால் மகிழ்வடைகின்றனர்.

ஸங்கீதம் இனிமையாயிருந்தாலும் பாடவேண்டிய வழிகள் பல உண்டு. ஸ்ரீமத், சங்கராசாரியார் அத்துவித மதத்தை விளக்கி ஸ்தாபித்ததுபோல் ஸ்ரீதியாகராஜஸ்வாமிகள் தோன்றி தமது பக்திரஸமான கீர்த்தனைகளால் பாடவேண்டிய பல வழிகளைத் திறந்துவிட்டு ஸங்கீதத்தை பிரகாசிக்கச் செய்தார். தற்காலம் சில பெரிய வித்வான்கள் பக்திபுகட்

டும் மேற்படி சுருதிகளைத் தமது வித்வத்தின் சாமர்த்தியத்தைக் காட்டுவதற்காக வார்த்தைகளை ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமலும், அர்த்தமில்லாமலும் பிரித்துச் சங்கதிகளைப் போட்டு இழுத்துச் சின்னா பின்னப்படுத்துகின்றனர். இன்னம் போட்டி கச்சேரி ஏற்பட்டுவிட்டாலோ எது முன் சம்பந்தமில்லாமலிருந்தாலும் அக்ஷரம் ஸரியாயிருந்ததும் போக எழுத்துக்களையே விழுங்கிவிடுகின்றனர். தவிர, பிறநாட்டிலிருந்துவந்த இந்துஸ்தானி நோட்டுகள் அதிகமாகிவிட்டு கர்நாட ராகங்கள் எங்கோ மறைந்துவிட்டன.

அந்தோ! நமக்கு கொஞ்சம்கூட தெரியாத அன்னிய பாஷையில் பாட்டுக் கற்றுக்கொண்டு க என்றதற்கு கலோ பலோ என்று ஸந்தேகத்துடன் தப்பும் தவறுமாய்ப் பாடுவதைவிட நாம் நம் தாய்ப்பாஷையில் நமக்குச் சுலபமாய் விளங்கக் கூடியதாய், நம் தெய்வத்தைக்குறித்ததாய் உள்ள பாட்டுக்களைப் பாடினால் எவ்வளவு நன்றாயிருக்கும். நம் கீர்த்தனைகள் நல்ல அர்த்த புஷ்டி யுள்ளனவாய் இகத்துக்கும் பரத்துக்கும் சாதகமாகும்படி யிருக்கின்றன. மற்றும் நம் ஸங்கீத சாஸ்திரத்திலுள்ள ராகங்களின் பெயர்களோ கேட்பதற்கு மிகவும் இனிமையாயிருக்கின்றன. உதாரணமாக, "ஸ்ரீரஞ்சினி, ராம்பிரியா, பூர்ணசந்திரிகா, விடவிதமார்க்கிணி" மற்றும் எவ்வளவோ இருக்கின்றன. தற்காலம் நம் சங்கீதம் ஆங்காங்கு மின்னலைப்போல் தோன்றி மறைகின்றது. நாம் திகட்டக்கூடிய பார்ஸீ முதலியவைகளில் மயங்காமல் நம் கர்நாடக ராகங்கள் என்றும் முன்போல் பிரகாசிக்கும்படி முயல்வோமாக.

நிற்க, பெண்களுக்குச் சங்கீதம் வருமா? சங்கீதத்திற்கு ஆதிதெய்வம் ஸ்ரீ ஸரஸ்வதி தேவியேயாம். நம்மிடம் ஓர் உயர்ந்த பொருளிருந்தால் அதை நமக்குப் பிடித்தவர்க்கே கொடுப்போம். நமக்குப் பிடித்தவர் நம்மினத்தாராகத்தான் முக்காலும் இருப்பார். அதுபோலவே, நாம், எடுத்தாலாகக் கூடிய ஒரு அற்பபொருளையே நம்மினத்தார்க்கு கொடுப்போமானால் தேவர் முதல் சகலரும் விரும்பித் துதிக்கும் அந்த சங்கீதமாகிற செல்வத்தை, எடுக்க, எடுக்க, வளரும் செல்வத்தை அத்தேவி தன் இனத்தாராகிய ஸ்திரீகளுக்கு அதிகமே அநுக்ரஹிப்பாளென்பதில் தடையுமுண்டோ.?

ஸ்திரீகளுக்கு ஸங்கீதம் அவசியமா?

(என்றால்) எந்தக் கற்புள்ள உத்தமியும் தன்னுடையவும், தன் குடும்பத்தோர்களுடையவும் க்ஷேமத்தைப்பற்றிப் பிரார்த்திக்க கடமையுள்ளவளாகவே யிருக்கிறாள். அம்படி ஒரு வழிப்பட்டுக் கடவுளைப் பிரார்த்திக்கச் சங்கீதமே மேல். ஆதலால் பத்திபரமான கீர்த்தனைகள் அவசியமே எனலாம்.

முன்காலத்தில் பாரதம் பாகவதம் முதலிய புராணங்களும் வேதாந்த சாஸ்திரங்களும் நீதிகளும் பாட்டுகளாகவே யிருந்தன. இப்பொழுது தான் வசனரூபமாக வெளிவந்திருக்கின்றன. நம்மூதாதையர் காலத்தில் ஸ்திரீகள் எழுதப்படிக்கக் கற்றுக்கொள்ளாவிட்டாலும் ஒருவரிடமிருந்து வாய்ப் பாட்டாக நீதிகளையும் புராணங்களையும் கற்றுக்கொண்டுவந்தனர். பெண்கள் பல்லவிஸ்வரங்கள் இந்துஸ்தானி முதலியவை கற்றுக்கொள்ளாவிட்டாலும் ஸங்கீதம் கொஞ்சமாவது அறிந்து

கொள்ளவேண்டுவது அத்தியாவசியமே. ஆதலால் ஸங்கீதம் ஸகோதரிகளாகிய நமக்கு இன்றியமையாததாம்.

வாத்தியங்கள் அப்பியசித்துத் தீரவேண்டுமென்பதில்லை. "குரல் இல்லாதவர்களுக்கே விரல்" அதாவது வாத்தியம். ஆனல் சுருதிஞானம் சரியாகக் கற்றுக்கொள்ள வேண்டியவர்களும் வாத்தியங்கள் வாசிக்க ஆவலுள்ளவர்களும் அப்பியசிக்கலாம். கூடியவரை அபஸ்வர மில்லாமலும் அக்ஷரப் பிழையில்லாமலும் பாடுவதே விசேஷம். சிறுமிகளுக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுக்கும் உபாத்தியாயர்களே தாம் சொல்லித்தரும் பாட்டின் அர்த்தம் தமக்கே தெரியாமல் பல எழுத்துக்களை மென்றுவிட்டுச் சிலபாட்டுக்கள் சொல்லித் தருகிறார்கள். கூடியவரை அர்த்தத்தை ஆலோசித்துப் பார்த்துப் பாடுவதே சிறந்ததாம். நான் இச்சிறு வியாசத்தில் ஸங்கீதத்தின் மகிமையையும் அவசியத்தையும் எடுத்துச்சொல்வது, சாகரத்தைச் சிறுபாத்திரத்தால் அளப்பதுபோ லாகும். ஆயினும் நம் ஆனந்தபோதினியின் மகிமையும் சங்கீதத்தின் மகிமையும் சாகரம் எவ்வளவு இறைத்தாலும் ஊறுவது போல, சொல்லச் சொல்ல வளரு மாதலால் எழுதலானேன். ஆனந்தபோதினியும் அதன் அபிமானிகளும் நீடூழி வாழ்க.

ஜீ. பார்வதி செல்லம்மாள், மதுரை

குறிப்பு.—சங்கீதம் தேவர்களுக்கும் பிரியமான ஓர் அரிய சாத்திரமே யாகும். இராவணன் தான் பிராணபத்தில் சிக்கிக்கொண்டபோது சாம வேத கானஞ்செய்தே ஈஸ்வரனிடம் மன்னிப்பும்வரங்களும்பெற்றான். ஈஸ்வரன் சாமவேதகானப் பிரியர் என்று கூறப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஸ்திரீயும், குறைந்தது தன் குழந்தையைத் தாலாட்டிதூங்கச் செய்வதற்காவது கொஞ்சம் சங்கீதம் தெரிந்துகொண் டிருக்கவேண்டியது அவசியமே. பக்தியால் மனம் உருகும் வண்ணம் கடவுளைத் துதிக்கப்பாடுவது தான் சங்கீதம் கற்பதன் பயன். அந்தக் கீர்த்தனம் முதலியவைகளின் அர்த்தத்தை யுணர்ந்து அதன்மேல் மனநாட்டம் வைத்துப் பாடுவதுதான் கடவுளைப் பாடுவதாகும். அதை விட்டுக் கேவலம் இராக உணர்ச்சியின் மேல் நாட்டம்வைத்து இடை யிடையில் முழுவார்த்தைகளையும் அரை வார்த்தைகளையும் விழுங்கி விட்டு 'ர... ஈ ஈ இ ஆ ஆ ஆ அ' என்று பாடுவது ஆன்றோரா லிகழப்பட்ட புல உணர்ச்சியா லுண்டாகும் சுகத்தையனுபவித்தலே யாகும். அதிலும் சிற்றின்ப உணர்ச்சியை யுண்டாக்கும் பாட்டுக்களைக் கற்பது சற்றும் அடாத நடக்கையே யாகும்.

"அளவு கடந்தால் அமிர்தமும் நஞ்சாம்" என்பது போல் நம்மாதர் சங்கீதம் கற்பதிலும் ஓர் அளவு வேண்டும். ஆரம்பத்திலேயே தில்லாலே மெட்டுகளும், டப்பாக்களும், காதற்சோகத்தை வெளியிடும் நாடகப் பாட்டுகளையும் கற்பித்து, அதைக்கேட்க ஆவல்கொண்டு நாடகங்களுக்குச் செல்லும்படி செய்துவிடுவது நம் பெண்மக்களுக்கு நாமே பெருந்தீங்கு செய்வதாகும் என்பது உண்மை. ஆன்றோர்களாகிய பக்திமான்களால் எழுதப்பட்டுள்ள கீர்த்தனங்கள் முதலியவைகளே நம் பெண்மக்களுக்குக் கற்பிக்கத் தகுதி யுடையவைகள். அவற்றை விட்டு இக்காலத்தில் காலையில் எழுதி அதேயிரவு நடத்தப்படும் நாடகப் பாட்டுகளாகிய டப்பா

மெட்டுகளைப் பெண்களுக்குக் கற்பிப்பது குளிக்கப்போய் அழுகிய சேற்றைப் பூசிக்கொள்வதாகும். இதற்காகவே சிலர் பெண்களுக்குச் சங்கீதம் அவசியமல்லவென்று அபிப்பிராயப் படுகிறார்கள். ஆகையால் பக்திமார்க்க சங்கீதமே நமது பெண்மக்களுக்குக் கற்பிக்கப்படவேண்டும்.

பத்திரிகாசிரியர்.

பத்திரிகை வாசிக்கவேண்டுமோ?

(இதைச்சற்று கவனமாக வாசியுங்கள்)

நேயர்களே! பத்திரிகைகளால் உண்டாகும் நன்மைகளைப் பற்றிப் பன்முறை பத்திரிகைகளிலும் பிரசங்க வாயிலாகவும் கண்டும் கேட்டும் இருப்பீர்கள். ஆனால் எதை வாசித்தாலும், எதைக் கேட்டாலும் அச்சமயம் ஏதோ காலப்போக்காகக் கேட்டுக் கொண்டு உடனே மறந்து விடுவதே நம்மவர் வழக்கமாக விருக்கிறது. இது நமது முன்னேற்றத்திற்கு இடையூறாயிருக்கும் நம்மிட முள்ள ஒரு பெருங்குறை. பத்திரிகைகள் ஒரு தேசமே, ஒரு ஜாதியாரே, என் ஜனசமூகமே க்ஷேமமடைந்து முன்னேறி வருவதற்கு ஆதாரமாக விருக்கின்றன வெனில், அவற்றாலுண்டாகும் பலனைப் பற்றி நாம் விரித்துக் கூறுவது அனாவசியம். ஒருவன் ஒரு நூலை வாசித்து அதன் சாராம்சங்களை யறியவேண்டுமாயின் அதற்கு மிக்க காலம் வேண்டும். அதைப்போதிக்க ஒரு ஆசான் வேண்டும். ஒரு நூலுக்கே இவ்வாறாயின், பல் வகையான இலௌகிக வைதீக சாத்திரங்களில் முக்கியமானவைகளை மட்டுமேனும் உணர வேண்டுமாயின் எவ்வளவு காலம் செல்லும்? எவ்வளவு உழைப்பு எடுத்துக் கொள்ள வேண்டும்? அது சாத்தியமாகக் கூடியதா? இல்லை யென்றே கூறலாகும்.

சகோதர சகோதரிகளே! ஒருவன் பத்திரிகைகளை வாசிப்பதால் மேற் கண்ட சகல சாத்திரங்களின் சத்தையும் அறிந்தவனாகிறான். ஒருவன் அரிசி, உப்பு, புளி, மிளகாய், காய் கறிகள், விறகு, எண்ணெய், பாத்திரங்கள், யாவும் சேகரம்செய்து பதமாகச் சமைத்துப் பிறகு பொசிப்பதற்கும், அன்னியன் சமைத்து வைத்து ஒரு இலையில் வட்டித்து அவன் எதிரில் கொண்டு வந்து வைத்தால் பொசிப்பதற்கும் எவ்வளவு வித்தியாசமிருக்கிறது. பின் மாதிரி கிடைப்பது பெரிய விசேஷமல்லவா. அதுபோலவே பத்திரிகைகள் நாம் இம்மை மறுமைப் பலன்களை யடைதவற்கு வேண்டிய பல நூல்களின் முக்கி யாம்சங்களைத் திரட்டிக் கொண்டு நாம் இருக்கு மிடத்திற்கு வந்து நமக்கு ஊட்டுகின்றன.

உலகில் இப்போது சகல விஷயங்களிலும் முதன்மை பெற்றுச் செல்வம், பலம், புகழ் முதலிய வற்றோடு பிரகாசிக்கும் எல்லாத் தேசங்களும் பத்திரிகைகளாலேயே உயர்ந்த நிலையை யடைந்திருக்கின்றன வென்பது அறிவாளிகளனைவரும் அறிந்த விஷயம். இங்கிலாந்து உவேல்ஸ் ஸ்காட்லென்ட், அயர்லண்ட் இவை நான்கும் கூடிய ப்ரித்தானிய இராஜ்ஜியம் நமது சென்னை இராஜதானியி லுள்ள ஐந்து அல்லது ஆறு ஜில்லாக்களுக்குச் சமமானதே. அவ்வளவு சிறிய நாட்டில் பிரசுரிக்கப் படும் பத்திரிகை

களின் எண்ணிக்கையையும், அவற்றில் ஒவ்வொன்றிலு முள்ள இலக்ஷக் கணக்கான சந்தாதாரர்கள் தொகையையும் கேட்டால் ஒருவன் பிரமிப் படைந்து அப்பா! வென்று அதிசயிப்பதோடு, கொஞ்சம் மந்த புத்தியுடை யவனுயின் நம்பவே மாட்டான்.

அத் தேசங்களில் ஜனங்களில் முக்கால் பங்குக்கு மேலுள்ளவர்கள் பத்திரிகைகளை வாசிக்கின்றூர்கள். ஆண், பெண், ஏழை, செல்வவந்தன், உத்தியோகஸ்தன், வர்த்தகன், குடியானவன், அம்பட்டன், வண்ணுன், கைத்தொழிலாளர் யாவருமே வாசிக்கிறூர்கள். வீடு கூட்டும் வேலைக் காரியும், குப்பை யெடுக்கும் தோட்டியுமே வாசிக்கிறூர்கள். மிகக்கொஞ் சம் பேரே அங்கு வாசிப்பில்லா திருப்பவர்கள். அவர்களும் சங்கங்களாகக் கூடிப் பத்திரிகைகளை வரவழைத்துப் படித்த ஒருவர்க்குச் சம்பளம் கொடு த்து அவரை வாசிக்கச் சொல்லிக் கேட்கிறூர்கள். பத்திரிகை விஷயத்தில் காசு செலவழிக்க அத்தேசத்தார் சற்றும் பின்னிடைவ தில்லை.

அந்தோ! நமது நாட்டாரோ இன்னும் பத்திரிகையின் பயனையே சற்று மறியாதவர்களாக விருக்கிறூர்கள். அந்தநாடுகளில் 100க்குப் பத்துப் பேர் பத்திரிகை வாசிக்காதவர்க ளென்றூல், நமது புண்ணிய பூமியில் பத் திரிகை வாசிப்பவர்கள் ஆயிரத்தில் பத்துபேர் இருப்பது அரிதே யென்ன லாம். கல்வியிலும், உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் ஸரஸ்வதியே அவத ரித்ததும், எண்ணிறந்த மகான்களும் மகரிஷிகளும் ஜனித்ததும், கடவுளர் அவதரித்ததுமாகிய இந்த நாடே மிக்க தாழ்ந்ததாக விருக்கிறது. இந்த அபாயகரமான பெருங்குறையை நீக்கவாவது நம்மவர் முயல்கிறூர்களா? இல்லையே.

இப்போது நமது ‘ஆனந்தபோதினி’க்கு ஏற்படுத்தியுள்ள 1-ரூபாசந்தா மிகக் குறைவான சந்தாவென்பதும், நம் தமிழ் நாட்டில் இவ்வளவு அள வுள்ள வேறெந்தச் சஞ்சிகைக்கும் சந்தா 2 ரூபா முதல் 3 ரூபா $3\frac{1}{2}$ ரூபாயாக விருக்கிற தென்பதும் பிரத்தியட்சமாக அறியக்கூடிய உண்மை. எத்தகைய ஏழையும் இதைவாங்கி வாசிக்கலாகும். நமது தாய்ப்பாஷையின் அபி விருத்தியையும் நம்மவரின் முன்னேற்றத்தையும் நோக்கமாகக் கொண்டே இவ்வளவு குறைந்த சந்தா வைக்கப்பட் டிருக்கிறது. அந்தோ! இவ்வாறிருந் தும் நம் தமிழ்ச் சகோதரரில் பெரும்பாலார் இன்னும் பத்திரிகை, சஞ் சிகை யென்றூல் அலட்சியமாகவே மதிக்கிறூர்கள்.

நம்மவரில் ஆங்கிலங் கற்று உத்தியோகம் செய்யும் ஒருவரை நமது சஞ்சிகை யபிமானி யொருவர் கண்டு “ தாங்கள் எப்போதும் கையில் ஒரு ஆங்கில பத்திரிகை வைத்துக்கொண் டிருப்பதைப் பார்த்தால் பத்திரிகை களில் தங்களுக்கு மிக்க அபிமானம் இருப்பதாகத் தெரிகிறது. நமது ஆனந்த போதினி மிகக் குறைந்த சந்தாவுடையது. நல்ல விஷயங்களை யும் போதிக்கிறது. வீட்டில் மாதர் சிறுவர்களும் வாசிக்க வேண்டிய விஷயங்களை யுடையது. அதையும் வரவழைக்கலாமே?” என்றூர்.

அதற்கு அவர், “ எங்கே ஸார்! தமிழில் நமக்கு இன்டாஸ்ட் (உருசி) இல்லை. அதில் என்ன இருக்கிறது? வீட்டில் பெண்டுகளுக்காக வென் யார் பத்திரிகை வரவழைக்கிறூர்கள். இங்கிலீஷ் பேப்பர்களி லுள் மாட்டர்கள் இவற்றில் என்ன இருக்கின்றன? என்னமோ பாட்டி க

களும், புராணக்கதைகளும் வீண் ஸ்டப்ஸ் (பசையற்றவை). அதோடு நமக்கு லெஷர் (அவகாசம்) எங்கே...” என்று கூறிவிட்டார்.

இவ்வாறே ஒரு வர்த்தகரிடம் பத்திரிகை வாங்கி வாசிக்கும்படி கூறியதற்கு அவர் “என்ன அய்யா! பத்திரிகையா? வீண்வேலை. அவன் பிழைக்க அவன் எதுவோ பொய்யும் புளுகும் ரெண்டெழுதி வள்ளெகாயிதத்தெ கறுப்பு காயிதமாக்கி துட்டு சம்பாதிக்கப் பாக்கிறான். வேலையத்தவங்கொதான் அதை வாங்கிகிட்டு பாத்துகிணு இருக்கணும். நமக்கென்ன வேலையில்லையா. அந்தநேரம் ஒரு பாக்கிப்பட்டி யிறக்கினாலும் கொடுத்தகடனை வசூல் பண்ணலாம். கடையில் பேரம்பண்ணவும் பேரேடு பதியவும் சாயந்தரம் ஆனால் தண்டல் சீட்டு போடவும் அப்புறம் வரவு செலவு பார்த்து கட்டவும் சரியாயிருக்குது. பொழெப்பெ பாத்துகிணு அல்லவா அப்புறம் எதுவும் பாக்கணும் - பொம்மனாட்டி படிச்சி உத்தியோகம் பண்ணப் போறாளோ. எங்கள்ளே அப்படி வழக்கமில்லெ” என்று கூறினார்.

நேயர்களே! இது எத்தகைய மனவருத்தத்தை யுண்டாக்குகிறது என்பதைச் சிந்தித்துப்பாருங்கள். ஆகாரத்திற்கு உழைப்பதும், உண்பதும் மிருகங்களும் செய்கின்றன. நாமும் அதையே செய்தால் நம்மையும் மிருகங்களென்றுதானே அறிவாளிகள் மதிப்பார்கள். அந்தோ கடவுளே! நம்மவர்கள் இன்னும் இத்தகைய அறிவற்ற நிலைமையிலிருந்தால் நம்தாய்நாடு எங்ஙனம் முன்னுக்கு வரும். இப்போது கொஞ்சம் ஆங்கிலம் படித்துவிட்டு உத்தியோகம் செய்வதாலேயே மமதை யடைந்து இம்மை மறுமைப் பயன்களை யளிக்கும் தெய்வீகத் தாயாகிய நந்தமிழ்த் தாயரை அலட்சியம் செய்வோர் அதோகதிக் காளாகி யல்லற்படுவரென்பதில் ஐயமுளதோ?

2 அணா முதல் 1, 2 ரூபாய்கள் வரையில் பயாஸ்கோப்புக்கும், நாடகத்திற்கும் தினம் செலவு செய்யும் அறிவாளிகள் மாதம் ஒன்றுக்கு 1 அணா 4 பை சஞ்சிகைக்குச் செலவு செய்யப் பிரியமில்லாம லிருப்பது இக்கலிகாலக் கொடுமையோ, நம் தாய் நாட்டிற்கு யாரேனும் இட்ட சாபமோ நாமறியோம். இச்சன்மத்தில் கடவுள் நமக்களித் திருக்கும் க்ஷேமத்தால் அறிவு மயங்கி நமக்கு ஈசுர பக்தியையும், ஞானத்தையும், மற்ற எல்லாப் போக பாக்கியங்களையும் அளிக்கும் சக்தியுடைய தேவபாஷையாகிய நம் தாய்மொழியை யலட்சியம் செய்வது பெரும்பாப மல்லவோ. நம் மக்கள் அதில் பக்தியும் சிரத்தையும் வைத்து அதைக் கற்கும்படி செய்யவேண்டியது நமது கடமையாயிருக்க, அதில் நாம் தவறினால் ஆண்டவன் கட்டாயம் நம்மைத் தண்டிப்பார் என்பதில் ஐயமே யில்லை. நேயர்களே! நம் தாய் நாட்டின் க்ஷேமமாகிய சுயநலங் கருதியேனும் நாம் பத்திரிகையை வாங்கி வாசித்து நமது நண்பர்களையும் வாசிக்கும்படி தூண்டாவிட்டால், நாம் ஆறறிவுடைய மானிடப்பிறவி எடுத்ததால் நற்பயனடைவோமோ?

சந்தாதாரர்களாகிய நண்பர்களே! “இலாபம் சம்பாதிக்கப்பத்திரிகை போடுகிறார்கள். நாமேன் அதை வாங்கி வாசிக்கவேண்டும்” என்று கருதி மதிமயங்கி யழியும் மந்தமதியினர்க்குப் புத்திகூறி பத்திரிகைகளினா லுண்டாகும் நன்மைகளை யவர்களுக்குப் போதித்துப் புண்ணியமடையமுயலும்படி யுங்களை வேண்டிக்கொள்கிறோம். எல்லாம் வல்ல நமது பசுபதியாகிய நயருமான் நம்மவர்க்கு நல்லறிவுச் சுடர்கொளுத்தி நல்வழியில் நம்மைக் குச்ப்ப வேண்டுமாய்ப் பிரார்த்திப்போமாக. ஓம் தத் சத்.

ஓர் தீய "ஆறு"

நண்பர்களே!

நான் உங்களுக்கு ஓர் ஆற்றைப்பற்றிக் கூறப்போகிறேன். "மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாற் றொடங்கினர்க்கோர்—வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே." என நந்தாயுமானார் கூறியவாறு, நதிகளில் நீராட மிக்க விருப்பமுடைய நீங்கள், நான்கூறப்போவது எந்த ஆறோ என்பதை யறிய ஆவலுடையவர்களா யிருப்பீர்கள். ஆனால் அது சர்வ பாபங்களையும் பரிகரிக்கும் சரஸ்வதி யாறுமல்ல; பல்லாயிர மாண்டுகாறும் படாத பாடும்பட்டு பகீரதன் கொணர்ந்த பாகீரதியுமல்ல; மற்றும் உலகத்தில் காணப்படும் எந்த ஆறுமல்ல.

இவ்வாறு கூறிவிட்டதால் நீங்கள் வருத்த மடையாதீர்கள்; நீங்கள் அதைப் பாராதிருப்பதே நலம். ஏனெனில் அதன் பெயரைக் கேட்டவளவிலேயே வெறுப்புக் கொள்வீர்கள். அது அழுக்கு நிரம்பப் பெற்றது; அணுகுவதற்கும், ஏன்? நினைப்பதற்குங்கூட யோக்கியதையற்றது; ஆன்றோரால் அவமதிக்கப்படுவது; தப்பித்தவறி தன்துறையில் இறங்கினோரை மீட்டும் கரையேற வொட்டாதபடி அதோ கதியி லழுத்திவிட வல்லது.

புண்ணிய நதியாயிருந்தால், அதைப்பற்றிக் கூறுவதே யன்றி ஆன்றோரால் அவமதிக்கப்படுவதும், நிறைந்த மலமுள்ளதும், அடைந்தோரை அழிக்கக் கூடியதுமாகிய ஆற்றைப்பற்றி யறிய அவாவுவோர் ஆர்? அனுவசியமாய்க் கூறுவா னேனெனின்? அறைகுவன்.

ஆதித்தோதயத்திற்கு முன் அமளி விட்டெழுந்து, அருகிலுள்ள ஆற்றிற்கோ குளத்திற்கோ சென்று, ஆக்கையின் அழுக்கு நீங்க, முறுக்கேற்றிய ஆடையையோ மணலையோ கொண்டு, அழுத்தித் தேய்த்துத் தேய்த்து நீராடி, மிக்க தூய்மையாய்க் காணப்படுவோரிற் பலரும், அந்தோ! தெரிந்தோ தெரியாமலோ அவ்வாற்றிலிறங்கி, மலத்திற்புரளும் பன்றியைப்போல, அசுத்த முள்ளவர்களாகவும் துன்ப மனுபவிக்கின்றவர்களாகவும் இன்னும் சில காலத்திற்குள் அவ்வாற்றாலழுத்தப்பட்டுக் கரையேற முடியாது நாசமடையவேண்டிய எதிர்கால சம்பவத்தையும் அறியாதவர்களாகவும், உடையில் தீப்பற்றி யெரிந்துகொண்டு வருவதை யுணராது களிப்புட னிருப்பவனைப்போலு மிருக்கிறார்கள். அத்தகை யோர்க்கு எச்சரிக்கை யுண்டாக்கவே இந்த ஆற்றைப்பற்றிக் கூறத் தொடங்கினேன்.

அதன் பெயர்தா னென்ன வென்பீர்களோ? அதுதான் அழுக்காறு. இதற்குப் பொறாமை, ஔவியம், காய்ச்சல், எரிச்சல் என வேறு பெயர்களுமுண்டு. நாய்களே இவ்வாற்றில் விருப்பத்தோடு விளையாடிக்கொண்டிருக்கும். (அதாவது நாய்களுக்குள்ள குணங்களில் பொறாமையுமொன்று. அதனையே நாய்க் காய்ச்ச லென்கிறோம்) அதில் மனிதர்களாடுதல் எவ்வாறு பொருந்தும்? எவனொருவன் அதில் அடிவைக்கிறானோ, அவன் குணம் உடனே மாறுதலடைகிறது. அவன் மனம் அவியாத அக்கி
போல் கொழுந்துவிட் டெரிந்துகொண்டே யிருக்கும். பிறரது செல்வ
கல்வி, கௌரவம் முதலியவற்றைக் கண்டால் அவன் சகிப்பதே யி
"பக்கத்துவீட்டுப் பரசுராம முதலி மகன் பாலன், பட்டினத்தில் பரி

யில் தேர்ச்சியடைந்து, உயர்ந்த உத்தியோகம் பெற்றானும்," என்று கேள்விப்பட்டவுடனே "ஆஹா! அவிசாரிபிள்ளைக்கு அதிகாரம் வரலாச்சா! பட்டி மகனுக்குப் பாக்கியம் வந்துதா?" என்று உடலெல்லாம் வியர்க்க, பெண்டாட்டி செத்தவனைப்போல் முண்டை முக்காடிட்டு மூலையிற் குந்தி முணு முணுத்துக்கொண்டு, ஆகாரமில்லாமல் "நல்லது! பார்க்கிறேன் ஒரு கை! பாம்பின் பல்லைப் பிடுங்குவதுபோல் அவனைத் தொலைக்காமல் பல் துலக்குவதில்லை," என்று பலவிடத்து மோதி, தன்னையொத்த தறுதலைகளுடன் கூடி, அவனைக் கெடுக்கு முபாயங்களை யெல்லாந்தேடி, வாடி வருந்துவான். தனக்கு ஒரு கண் போனாலும் போகிறது. எதிரிக்கு இரண்டு கண்ணும் போனால் போதும் என்பதே இவன் கோரிக்கை. யாரேனு மொருவர் மற்றவனைப்பற்றி மேன்மையாகப் பேசினாலும் "ஓஓ! அவன் சங்கதி ஒருவருக்கும் தெரியாதோ! அவன் பாட்டன் அப்படி; அவன் ஆத்தாள் இப்படி," என்று இல்லாததும் பொல்லாததும் சொல்லி இழிவுபடுத்தித் தூற்றினாலொழிய அவனுக்குத் தூக்கமே வராது. இங்ஙனம் கூறுவதால் எல்லாரும் நமது இழி குணத்தை யறிந்துகொண்டு நம்மையே இகழ்வார்களே என்பதை எள்ளளவும் எண்ணுவதே கிடையாது. வண்டுகளுக் குள்ளே பகாவீகாரப் பழத்தை யுண்ணும் வண்டுக் கொப்பானவ னல்லனோ இவன்.

குந்தி பிள்ளைகளைப் பெற்றாளென்பதைக் கேட்டு மனம் பொறாது வயிறெரிந்து அம்மிக்குழவி யெடுத்து அடிவயிற்றி லிடித்துக்கொண்ட காந்தாரி அடைந்த பயனே இவனு மடைவான். 'தானே தனக்குப் பகைவனும் நட்டானும்', என்றபடி தனக்குத் தானே குழிவெட்டிக்கொள்ளுகிறான். மற்றவர்கள் இவனைத் தண்டிக்கத் தேவையில்லை. மற்ற பாபங்களைச் செய்ய இவன் முயற்சிக்க வேண்டியதில்லை. இஃதொன்றே கொலை களவு முதலிய எல்லாப் பாபகாரியங்களையும் வலிய கை பிடித் தழைக்குந் தூது. இவன் கடைசிவரையில் கடைத்தேறவே மாட்டான். நாயையொத்த இழிஞர்களே இவ்வாற்றில் இறங்குவரென்றால் கற்றவர்களுமல்லவோ இக்கொடிய கூற்றுவ னாற்றிற் கிரையாகின்றனர்! இஃதென்னே! விளக்கைப் பிடித்துக்கொண் டிருந்தும் கிணற்றில் விழுவதா? இது நிறைந்த கல்வியில்லாக் குறையோ! எட்டுச் சுரைக்காய் கறிக்குதவாதே யன்றி வீட்டுச் சுரைக்காய் உதவுமென்று வாசா ஞானம் பேசின அதிகப்பிரசங்கியைப்போல, கற்ற நெறியில் நிற்கப் பழகாத குறையோ! தேன் வார்த்து வளர்த்தாலும் கைப்பு நீங்காத வேம்பைப்போல இயற்கை யறிவா லுண்டாம் குறையோ! என்னென்று கூறுவது!

'தான் கெட்டாலும் பிறர் வாழவேண்டும்,' 'எட்டி மரமாயினும் பச்சென்றிருந்தால் கண்ணுக் கழகு'. 'நாடெங்கும் வாழக் கேடொன்று மில்லை.' என்னும் பழமொழிகளை யறியாத ஓ! பொறாமைக்குண மனுஷா! நீஎத்தனை நூல்களைக் கற்றிருந்தாலும் பயனென்ன? அழுக்காறுகொண்ட அறிஞா! புறங்கூறித் திரியும் புண்ணாக்கு மாடா! அழுக்காற்றில் எவனொருவன் இறங்குகிறானோ அவன் இம்மையில் எல்லாச் செல்வங்களையு மிழந்து மறுமையில் சகிப்பதற்கரிய நரகத்திலழுந்தித் துன்ப மடைவான் என்னும் கு[illegible]டன்,

"அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்"
எனத் தேவர் திருவாய் மொழிந்ததைச் சிந்தித்துப் பார்.

யானையால் துரத்தப்பட்டவன் தப்பி யோடுவது போல், அவ்வாற்றி னின்றும் ஓடித் தப்ப வழிதேடு.

நண்பர்களே! நீங்களும் அதற்குப் பயந்து எச்சரிக்கையாவிருங்கள். அதுவே பிறவியாகிய பெரிய கடலைக் கடந்து அந்தமி லின்பத் தழிவில் வீட்டை யடைவதற் கேற்ற மார்க்கமாகும். பிழை பொறுக்க.

பூ. ஸ்ரீநிவாஸன்,
தமிழ்ப்பண்டிதர்,
இராணிப்பேட்டை.

"செய்வன திருந்தச்செய்."

'தீமை மற, நன்மை கடைப்பிடி' என்றபடி தீயவை என்று கருதப்படும் வினைகளை விலக்கி சத்விஷயங்களில் பிரவர்த்திப்பதற்கு முன், 'தூக்கிவினை செய்' என்றபடி, முன் பின் காரியங்களைத் தன் அறிவிற் கெட்டிய வரை யோசித்து, செய்யக் கூடியனவா யுள்ள காரியங்களைத் திருத்தமாகச் செய்யும்படி 'செய்வன திருந்தச்செய்' என்று நம் ஒளவை மூதாட்டி திருவாய் மலர்ந் திருக்கின்றார்கள்.

நாம் செய்துவரும் வினைகள் சுய நயமென்றும் பிறநயமென்றும் இரு வகுப்பா யிருக்கின்றன. அதில் சுயநயம் நாடுவதைப் பகுத்தறிவின்றிய ஜீவர்களுங்கூட இயற்கையாய்ச் செய்து வருவதால் அதை ஓர் பால் வைத்துப் பரோபகார மென்பதைப்பற்றிச் சற்று சிந்திப்போம்.

சுய நயத்திலும் பரோபகாரமாகிய பிறர் நயங் கருதுவதே மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவனும் அனுஷ்டித்து வரவேண்டிய முக்கிய கடமை என்று நாம் அறியவேண்டும்.

அறிந்திடினும் செய்கையில் அதற்கு மாறாகச் சிலர் சுய நயத்தையே முக்கியமாய்க் கொண்டு பரோபகாரத்தைத் தாம் செய்யவேண்டிய முக்கிய கடமை யென்றெண்ணாமல் கீழ்க்கண்டபடி ஒருவர் தம்மை ஓர் உதவி வேண்டின் அவருடைய முகமனுக்காக பார்வைக்கு மட்டும் நடித்து உப காரஞ் செய்ததாகக் காட்டி விடுகிறார்கள்.

உண்மையில் மாமிதலையில்கையும் வேலிப்புறத்தில் கண்ணுமாகவும், தானே செத்தான் ஏனோ அழுகிறேன் என்றும், அயலார் குழந்தைக்கு கால் கழுவினது போலு மிருக்கிறது.

இத்தகைய பரோப காரத்தால் உபகாரம் பெற்றோருக்கும் செய்தோருக்கும் பல கஷ்ட நஷ்டங்க ளேற்படுவ தன்றிக் கோரிய நன்மையை அடையப் போவதில்லை.

எப்படி எனில் எம் [illegible]ட்டுத் தலைவ ரொருவர் கிரிமினல் கோர்ட்டில் அமகாண் டிருந்த க[illegible] கேசை இராசி செய்யும்படி தாம் வாதிக்குப் பிரதிவாதி தரப்பில் கீழ்க்கண்டபடி கடிதம் எழுதினர்:—

"எதிரி தங்கள் விஷயத்தில் இனி அத்தகைய குற்றம் செய்வதில்லை என்றும் யோக்கியமாய் நடந்து கொள்வதாகவுஞ் சொல்வதால் சமாதானத்தை நாடுவது தங்கள் மதத்திற்கும் அடுத்ததா யிருப்பதால் உடனே சமாதானஞ் செய்துகொண்டு பிராதை நிறுத்திக்கொள்ள வேண்டியது" என்று ஒரு சமாதானக் கடிதம் எழுதி பிராதிக்கப்பினர். பிராதி அக்கடித மூலம் சமாதானத்தை விரும்பாமல் அதைத் தனக்கு அனுகூலமான ரிக்கார்டாக விசாரணை காலத்தில் கோர்ட்டில் தாக்கல் பண்ணி "இக்கடித மூலம் என் எதிரி குற்றத்தை ஒப்புக் கொள்ளுகிறான். எப்படி எனில், 'இனி அத்தகைய குற்றம் செய்வதில்லை' என்பதால்" என்று முன்னடிச் செய்ததாக அருத்தம்பண்ணிக் குற்றத்தை ருசுப்படுத்திவிட்டார். நாட்டுத் தலைவர் எழுதிய கலியாண ஓலை இழவோலையாகி விட்டது.

கீழ்ப்படிதலின் அங்கமாகச் செய்யாத குற்றத்தைச் செய்ததாக ஒப்புக் கொண்டாவது சமாதானத்தைப் பெறவேண்டுமென்ற நோக்கத்தோடு எழுதிய நிருபத்தை 'ஒரு கன்னத்திலடித்தால் மற்றொரு கன்னத்தையும் திருப்பிக்கொடு' என்று உபதேசம் செய்கிற (பிராதியாகிய) உபதேசியார் தம்மைக்கும்பிட்டகையை வெட்டுவதுபோல், கோர்ட்டில் தாக்கல் பண்ணித்தமக்கு அனுகூலம் செய்துகொண்டார். இதுநிற்க,

சமாதானஞ் செய்ய நோக்கங்கொண்ட நாட்டுத் தலைவர் சற்று ஆழ்ந்து யோசித் திருப்பாராகில் தம் கடிதத்திற்கு மதிப்பளிக்காத உபதேசிக்கு இத்தகைய அபத்தமான நிருபம் எழுதியிருக்க மாட்டார். எழுதினும் சற்று சிரத்தை எடுத்திருப்பாராகில் இராசிசெய்ய முடியாவிடினும் அந்த நிருபம் கோர்ட்டில் தாக்கலாகாமல் இருக்கும்படி செய்திருக்கலாம்.

பரோபகாரஞ் செய்வதில் சிரத்தை யின்றி அசிரத்தையாய் "ஆளோட்டை ஆளாய் என்னம்மா அழுதிட்டு வரச் சொன்னாள்" என்ற பழமொழி போல் சிலர் நடந்து வருகிறபடியால் காரியக்கெடுதல்கள்ஏற்படுவதன்றிப் பழிச்சொற்களுக்கும் இடமாகிறது. இத்தகையோர் மேற் போன்றவிஷயங்களில் முன்வாரமலிருப்பதே உசிதம். இதனால் நான் பரோபகாரஞ் செய்யவேண்டாமென்று சொல்ல முன் வரவில்லை. நண்பர்கள் தங்கள் அறிவிற் கெட்டியவரை திருத்தமாக யோசித்து நடைபெறுங் காரியங்களை முயற்சியோடு நடத்தி முடிவுக்குக் கொண்டுவரப் பழகி வரும்படி பிரார்த்திப்பதே என் கருத்து.

உண்மைவிளம்பி.
ஜமீன் வெள்ளியக்குண்டம்.

குறிப்பு:—நாம் நன்மை செய்ய வேண்டுமென்று கருதி ஒரு காரியத்தைச் செய்ய அது தீமையாக முடிவதுமுண்டு என்பதற்கு இது ஒரு திருட்டாந்தமாகும். ஆனல் இச்சந்தர்ப்பத்தில் 'எண்ணித் துணிக கருமம்' என்றபடி முன்ஆலோசனை செய்யாது பிராதியின் உண்மைக்குணத்தையும் யோக்கியதையையும் பெருந்தன்மையையும் இத்தகையன வென்றுணராமல் கையறுத்துக் கொடுத்தது தவறாக முடிந்தது. இது பிறருக்கு ஓர் எச்சரிக்கை யாகும்.

இதில் இன்னொரு எச்சரிக்கையு முளது. அதாவது இக்காலத்தில் உபதேசி, குரு, சாமியார் என்று அனேகர் மோக்ஷவழி காட்டிகளாய்

வெளிவந்துளர். இவர்களிடம் பரிசுத்த உள்ளம், பொறுமை முதலிய குணங்களில்லை யென்பதை யுணராது அனேகர் ஏமாந்து துன்பத்திற் காளாகிறார்கள். மேலே குறித்தவிஷயத்தில் தம்மை வணங்கி மன்னிப்புக் கேட்ட ஒருவனுக்கு அவ்வாறு துரோகம் செய்யும் குணமுடைய ஒருவர் பிறருக்கு மோக்ஷவழி காட்டுவார் என்று நம்புவது குருடனை இருட்டில் வழி காட்டியாக அழைத்துச் செல்வது போன்றதே. நண்பர்களே! வெளித்தோற்றத்தை நம்பாதீர்கள்! நம்பாதீர்கள்!

பத்திரிகாசிரியர்.

கைவல்ய நவநீத வசனம்

(419-பக்கத் தொடர்ச்சி)

சீடன் அனுபவம்.

ஆசான் அருளிய வண்ணம் சீடன் தத்துவ நெறிவழாது பஞ்சகோசங்களையும் தானல்ல வென்று கழித்து, அதற்கு மேலுள்ள சூனியமான பாழையுங் கடந்து, அங்கு அணுரூபமாக வுள்ள சாக்ஷியாகிய கூடஸ்தனே தான் என்னும் நிலைமையையும் விட்டு, அதற்குமேல் அக்கூடஸ்தனே பிரம்மம் என்னும் அகண்டாகார விருத்தி அனுபவத்தையும் நழுவவிட்டுப் பரிபூரணமான பிரம்மானுபவ நிலையை யடைந்தான்.

["ஓதரிய துவிதமே அத்துவித ஞானத்தை யுண்டுபணு ஞானமாகும்" என்று நமது மெய்ஞ்ஞான வள்ளலாகிய தாயுமானவர் அருளிய வண்ணம் துவித நிலையிலிருந்தே அனுபவம் தொடங்குகிறது. தேகமுதல் அந்தக் கரணங்கள் வரையிலுள்ள ஒவ்வொரு தத்துவங்களையும் சாக்கிர சொப்பன சுழுத்தியாதி அவஸ்தா ரூபமாகவோ, அன்னமயாதி பஞ்சகோச ரூபமாகவோ ஒவ்வொன்றாகக் கண்டு நமக்கு முன்னிலையாகத் தோன்றுவனவும், நம்மாலறியப்படுவனவும், ஓர் காலத்திலிருந்து ஓர் காலத்தில்லாமற் போகும் அநித்தியப் பொருள்களா யுள்ளனவு மாகிய இவை யாவும் நாமல்ல வென்று கழித்து, இவ்வாறே யிறுதியிலுள்ள சூனியத்தையும் கழிக்குமட்டும் துவித பாவ மிருக்கிறது. இதற்குத் துவித விருத்தி என்று பெயர்.

இதற்குமேல் உள்ளது சாக்ஷி ரூபமாகிய கூடஸ்தன். இது அணுரூப முடையதென்று கூறப்பட்டிருக்கிறது. அதாவது அதிசூக்கும ரூபமுடையது. இக்கூடஸ்தனாகிய சாக்ஷியை நாமென் றனுபவிக்கும் நிலைக்குச் சாக்ஷி விருத்தி யென்று பெயர். இந்த இரண்டு விருத்திகளும் தள்ளத் தக்கவைகளேயாம். "துவைத விருத்திதான் அஞ்ஞான நிலை; பாசத்தில் பந்தப்படுத்துவது. சாக்ஷி மாத்திரமா யிருத்தல் உண்மையானதும் அஞ்ஞான மற்றதுமான நிலைதானே அதனை யேன் ஒழிக்கவேண்டும்?" என்று கேள்வி யுண்டாகலாகும். சாக்ஷியைத் தானெனல் பந்தமல்லவெனினும் அங்கும் "நான்" என்பதுண்டு. ஆதலின் அது அத்வைத ஞான சாதனமாகாது. ஆதலின் அதையும் விடவேண்டியதே.

இக்காட்சியைப் பார்த்தே "தத்துவமசி" மகாவாக்கியம் கூறப்பட்டதாதலால், இங்குதான் 'சிவோகம்' பாவனை அல்லது 'அகம் பிரம்மாஸ்மி'

அனுபவம் தொடங்குகிறது. இதுவே தானற்ற அத்துவித அகண்டாகார ஞானத்திற்குச் சாதனமானது. ஆதலின் இதற்கு அகண்டாகார விருத்தி என்று பெயர். இதையே நிலையாக அப்பியசித்துத் தானற்ற அத்துவித சாக்ஷாத்காரமான பிரம்மானுபவ நிலையை யடையவேண்டும். இந்த அனுபவ முதிர்ச்சியிலும் 'நாம் பிரம்ம சொரூபமாக விருக்கிறோம்' என்ற கிஞ்சித் நினைவுண்டு. அதற்குத் தற்போதம் (தான் என்ற உணர்ச்சி) என்று பெயர். இக்கிஞ்சித் நினைப்பும் நித்திரையி லிருப்பவன் கைப்பொருள் நழுவுவதுபோல் நழுவிவிட வேண்டும். இது ஒழியுமட்டும் உள்ளது உண்மை நிலை யாகாது. இது ஒழிந்த பின் புள்ளதே சாக்ஷாத்கார நிலையாகும். இதுவே தானற்ற அத்துவித அகண்ட சாக்ஷாத்கார அனுபவம் என்பது. தற்போதம் ஒழிந்தபின்பே பேரின்பம் ஜனிப்பதால்தான் அது 'அதீதநிலை' என்றும் 'கண்டவர் விண்டதில்லை' என்றும், 'காணுமற் காணும் காட்சி' என்றும், 'தூங்காத தூக்கமது தூக்கும் பராபரமே' என்றும், கூறப்பட்டிருக்கிறது.

மேற்சொன்னபடி துவித விருத்தி, சாக்ஷி விருத்தி இரண்டையும் நீக்கி அகண்டாகார விருத்தியையே நிலையா யப்பியசிக்க வேண்டுமென்பதற்கு:—

"தேகமுத ஞனென்ன றுவித விர்த்தி
திகழ்சாட்சி நானென்னல் சாக்ஷிவிர்த்தி
யேகபர நானென்ன லகண்ட விர்த்தி
யிம்மூன்று விருத்திகளி லிரண்டைத்தள்ளி
யாகுமகண் டாகார விருத்திதன்னை
யனவரத மாதரவா யப்பியா சித்துச்
சோகமுறுஞ் சித்தவிகற் பங்க டீர்த்துச்
சொன்னவகண் டேகரச சொரூப மாவாய்"
(ரிபுகீதை)

'நான்' என்பது அற்ற விடமே. அந்நிலை யென்பதற்கு,

"நினைத்துணை யன்றியே யில்லைநா னற்றபின்
பினைத்துணை காணேனென் றுந்தீபற
பெரிய மௌனமீ துந்தீபற" (சொரூப உந்தியார்)

"நான்" என்றநினைவே தற்போதம். நானென்பதும் அதுவென்பதும் ஞானமயம் என்பது மாகிய திரிபுடிகளும், நாம் அதுவாயிருக்கிறோம் என்ற உணர்வும், ஆகிய யாவுமிறந்த விடமாதலின் அது இன்னபடி யென்று கூறொணாத நிலை யென்பதற்கு,

"நானே வதுவோ வதுநானே நானதுவோ
ஞானே தயமோநா தாந்தமோ—மோனமோ
சுத்தமோ சூனியமோ தோற்றுஞ் சுபாவநிலை
யித்தனையு மல்ல வாமே." (சொரூப சாரம்)

ஆன்ம சொரூப மாத்திரமாகிப் பின் அதையுந் தள்ளி யடைய வேண்டிய முடிவான நிலை வாக்கு மனோதீதமானது என்பதற்கு,

"அன்னதையுந் தள்ளியபின் பிரமமாத்ர
மாயிடுவாய் மற்றதையுந் தள்ளியிங்கு

சொன்னவெலா மிழந்துவெளி தாகநிற்பாய்
சொன்னதையுந் தள்ளிமிக வெளிதாய்நிற்பாய்
பின்னுளமே முதலியவோ ருபாதியின்றிப்
பேசவொணச் சூனியமா நிலையினிற்பா
யின்னவித சூனியமு மிழந்தபின்ன
ரெவ்வடிவோ வவ்வடிவே யாகிநிற்பாய்.

நிற்பதெனுந் தன்மையுமே யிழந்தபின்னர்
நீயா யிருக்கின்ற சுபாவந்தன்னைச்
சொற்பமுமே வாக்காலு மனதினாலுஞ்
சொல்லவொண வெண்ணவொண தாதலாலே
தற்பரமாஞ் சகசநிலை சார்ந்தபின்னர்
தான்றானே தானகத் தனித்திருப்பா
யற்பமுமே விகற்பமிலா வவ்விருப்பை
யறைந்திடவு நினைந்திடவு மார்தான்வல்லோர்"

(ரிபு கீதை)

* "வாய்ந்த வுபசாந்த வாதனை யுள்ளப்போ
யேய்ந்த சிவமாத லின்சிவா னந்தத்துத்
தோய்ந்தறன் மோனச் சுவானு பவத்தோடே
யாய்ந்ததிற் றீர்க்கை யானதீ ரைந்துமே" (திருமூலர்.)

ஞாதுரு, ஞான, ஞேயங்களற்ற இடம் என்பதற்கு,

"தானான தன்மயமே யல்லா லொன்றைத்
* * * * *
ஞானகா ரத்தினொடு ஞேய மற்ற
ஞாதுருவு நழுவாம னழுவி நிற்கும்
ஆனாலு மிதன்பெருமை யெவர்க்கார் சொல்வா
ரதுவான லதுவாவ ரதுவே சொல்லும்"

(தாயுமானவர்)

மேலே கூறியபடி காண்பான் காட்சியாதி திரிபுடி இரகிதமான பிரமானுபவ நிலையை யடைந்த சீடன், அநுபூதி ரூபமான பிரம்மானந்த வெள்ளத்திற் படிந்து, தேகம் இந்திரியம் முதலிய அனைத்தும் ஒழிந்து

---

* வாதனை யுள்ளப்போய்=வாதனையடங்கச்சென்று. (வாதனை=முன்நினைப்பு.)

சிவானந்தத்தில் தோய்ந்து = சிவானந்த வெள்ளத்தில் மூழ்கி அறல்=தற்போதம் ஒழிதல், அதாவது தானென்பதுஇல்லாமற் போதல்.

தீர்க்கையானது ஈரைந்தும் (ஏ-அசை)=ஈரைந்தும் அதாவது பத்தும் ஒழிக்கத் தக்கன

ஈரைந்தும்=(1) ஆணவ மொழிதல். (2) தன்னை யுணர்தல். (3) அதனையு மொழிதல். (4) சாக்கராதீதம். (5) வியாபதம். (6) உபசாந்தம். (7) சிவமாதல். (8) சிவானந்தத்திற் கலந்து தானற்று நிற்றல். (9) மோன சுகானுபவம். (10) அதனையும் விட்டொழிதல். ஆகிய இவை பத்தும்.

சித்ரூபமாகி, மனம் பரிபூரண நிலையடைந்து சற்குருவும் பார்த்தருள நனவிற் சுழுத்தியாகிய சமாதி நிலையை யடைந்தான்.

[நனவிற் சுழுத்தி என்பதே "தூங்காமற் றூங்கல்" என்பதாம். சாதாரண சுழுத்தி அல்லது நித்திரையில், இந்திரியங்களனைத்தும் தமது காரணமாகிய அஞ்ஞானத்தில் ஒடுங்கி விடுகின்றன. அவ்வாறே மனமும் காரண சரீரமாகிய அஞ்ஞான இருளில் மூழ்கி விடுகிறது. இக் கருவிகள் யாவும் ஒடுங்கிவிடவே ஆன்மா தொழிலின்றி நித்திரையின் சுகத்தை யனுபவிக்கிறது. இந்த அஞ்ஞானத் தூக்கம் ஆன்மா தன்னை மறந்த விடத்துண்டாகின்றது.

ஆன்மா தன்னை மறவாமல் மனதின் சத்துவ சொரூப உதவி கொண்டு மேல்கண்ட கருவி கரணங்கள் யாவற்றையும் ஒவ்வொன்றாகக் கண்டு தானல்ல வென்று கழித்து மனோலய மடைந்து, அறிவுமயமான தன் நிஜ சொரூபத்தை யுணர்ந்து, அருளை முன்னிட்டுத் தான் அதுவாகி நான் என்ற தற்போதமாகிய அகங்காரம் அற்ற விடத்தில், தொழிலற்றுச் சிந்தனை யற்றுப் பேரின்பமாகிய ஆனந்த நித்திரையை யடைகின்றது. இதையே பட்டினத்தடிகள் "ஆனந்த நித்திரை தங்குகின்ற வனந்தனிலே யென்றிருப்பேன் அத்தனே கயிலாயத்தனே" என்றருளினார். தாயுமான சுவாமிகள்,

"ஆங்கார மற்றுன் னறிவான வன்பருக்கே
தூங்காத தூக்கமது தூக்கும் பராபரமே" என்றருளினார்கள்]

சீடன் நெடுநேரம் இவ்வாறு சமாதியனுபவத்தில் இருந்து பகிர் முகத்திற்கு வந்த பின் மெய்ஞ்ஞான சொரூபியாகிய தேசிகனைக் கண்டு, பக்தி மேலிட்டுக் கண்களில் ஆனந்த பாஷ்பம் பொழிய, அவரது பாதாரவிந்தங்களிற் பணிந்து நின்று அஞ்சலியஸ்தனாகிப் பின் வருமாறு கூறினான்.

"அடியேனைப் பல ஜன்மங்களாகத் தொடர்ந்திருந்த அஞ்ஞானத்தை யொழித்து ஞான உபதேசம் செய்தருள அருளே திருமேனியாக அவதரித்த என் மெய்ஞ்ஞான தேசி கோத்தமரே! தங்களைப் பன்முறை நமஸ்கரிக்கிறேன். அடியேன் கடைத்தேறும் வண்ணம் எனக்கு நித்தியானந்தப் பேறாகிய மோட்ச வீட்டை யளித்த இந்த இணையற்ற பேருபகாரத்திற்குச் சிறியேனாகிய நாயேன் செய்யத்தக்க கைம்மாறு யாதோ அறிகிலேனே" என்றான்.

சீடன் இவ்வாறு கூறியதைக் கேட்ட ஆசான் சந்தோட மடைந்து, அவனை யருகில் வாவென்று அன்போடழைத்துச் சமீபத்தில் இருத்திக் கொண்டு,

"மகனே! ஞான அனுபவத்திற்கு இடையூறு செய்யும் பிரதி பந்தங்கள் மூன்றும் உன்னைத் தொடர வொட்டாமற் செய்து மெய்ஞ்ஞான அனுபவத்தில் நிலைத்திருப்பா யாயின் அதுவே நீ நமக்குச் செய்யும் பிரதியுபகாரமாகும்" என்றருளினார்.

இதைக்கேட்ட சீடன் வியப்பும் அச்சமு மடைந்து ஆசாரியரை நோக்கி "என் அருட் குருவே! கூடஸ்தன், பிரம்மம் என்ற துவித கற்

பனை யொழிந்து, அத்துவிதமாய் ஏகமாய் எங்கும் பரிபூரணமாய் அறிந்து தெளிந்த ஞான அனுபவம்கூடப் பிறகு நீங்கி விடுமோ ?" என்று வினவினன்.

ஞானகுரு:—"மைந்தனே ! எல்லாம் தன் மயமாகவே ஆகும் பிரம்மானுபவம் சாத்திர விசாரணையாலும் குருவின் உபதேசத்தாலும் உதிக்கும். ஆயினும் பிரதி பந்தங்க ளுண்டாயின் அந்த அனுபவம் நிலையாகத் திடப்படாது" என்றனர்.

சீடன்:—"சுவாமிகளே! அப்பிரதி பந்தங்கள் எவை யென்றும், அவைகளை யொழிக்கும் மார்க்கம் எது வென்றும் கடாட்சித்து அடியேனை யீடேற்றி யருளப் பிரார்த்திக்கிறேன்" என்றான்.

(தொடரும்) சீடன்.

சிறுவர்க்குரிய சிறந்த உபதேசங்கள்.

ஒருவன் மகா புத்திமானு யிருந்தாலும் அவனும் இன்னொருவனுடைய புத்தியை அநுசரித்தே தீரவேண்டும். நானே புத்திமான் என்னும் அகங்காரங் கொள்வது கூடாது. ஒருவன் தான் மகா சூரனாக இருப்பினும் அவனும் சைனியங்களுடைய உதவியை முன்னிட்டே நடக்க வேண்டும். ஒருவன் எவ்வளவு கல்வி கற்றவனாக விருப்பினும் அவனும் தன்னை விடக் கற்றோரைக் கண்டபோது அவர்க் கடங்கி அவருடன் நட்புக்கொண்டு நடக்கவேண்டும். பூமி முழுதும் ஒரு குடையின் கீழ் ஆளத்தக்கவனானாலும் அவன் வாயிலிலும் கருத்துள்ள ஒரு மந்திரி யிருத்தல் வேண்டும். ஒருவன் சங்கீதத்தில் மகா தீரனாயிருந்தாலும் சுதி கூட்ட ஒருவன் வேண்டும். நல்ல விளக்காயினும் அதற்கு ஒரு தூண்டுகோல் வேண்டும். ஆகையினால் எப்படிப்பட்ட சமர்த்தனும் தனக்கு ஒருவனுடைய தயவு தாட்சியணியம் வேண்டியதில்லை யென்று சொல்ல முடியாது. உலக வாழ்வு ஒருவரிடம் ஒருவர் கொள்ளும் சிநேகமாகிய சங்கிலியினாலே பிணைக்கப்பட்டதாம்.

2. ஒருவன் எவ்வளவு புத்திமானானாலும் எவ்வளவு பலசாலி யானாலும் அவன் தன்னைப்பற்றிப் பிறரிடம் புகழ்ந்து பேசாமலிருப்பதே அறிவுடைமையாம் :—

"தோன்றா தோற்றித் துறைபல முடிக்கினும்
தான்றற் புகழ்தல் தகுதியன்றே"

என்று கூறியிருப்பது காண்க. தன் வல்லமையைத் தானே பேசிக் கொள்கிறவன் தவறாமல் அவமானமடைவான். ஆனால் ஒருவன் தன்னைப் பற்றிப் புகழ்ந்துகொள்ள வேண்டிய சமயமுண்டு. ஒரு வித்வான், தான் ஒரு ராஜசபைக்கு எழுதும் சீட்டுக் கவியிலும், தன் வன்மையை அறியாதாரிடத்திலும், பெரிய சபையில் வாதஞ் செய்து வெல்லும் பொழுதும் தன்னை எதிரி பழித்த காலத்திலும் தன்னைத் தான் புகழ்ந்து கொள்ளத் தகும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது வித்வான்களுக்கே. மற்றவர்களுக்கு எக்காலத்தும் தற்புகழ்ச்சி யாகாது.

3. ஒருவன் செய்த ஓர் அற்பமான நன்றியையும் மறவாதே! ஆனால் பிறர் உனக்குச் செய்த தீமையை மாத்திரம் உடனே மற. நன்றி மறந்த

வனை மிருகம் என்று சொல்வதும் பொருந்தாது. மிருகங்கள் தங்களுக்குப் பிறர் செய்த நன்றியை மறவாமல் தக்க சமயத்தில் உதவுவதை நாம் பிரத்தியட்சத்திலே பார்க்கின்றோம். இந்த அரிய செய்கையை நாம் நாயினிடம் பார்க்கலாம்.

" எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு "

என்று தமிழ் வேதம் போதிப்பதறிக. ஆகவே செய்ந்நன்றி கொன்ற சண்டாளனுக்கு ஒரு போதும் நற்கதி யில்லை என்பது திண்ணம். மேலும் அவன் நாயினும் கடையனாகின்றான்.

4. எவன் ஒருவன், ஒருவனை மாணாக்கனாகக் கைக்கொண்டு கல்வியில் நல்லபயிற்சி செய்விக்கின்றானோ அவனே ஆசாரியன். எவன் பணம் பெற்றுக்கொண்டு ஒருவனுக்குக்கல்வி கற்பிக்கின்றானோ அவன்உபாத்தியாயன். உபாத்தியாயனைக் காட்டிலும் ஆசாரியன் பத்து மடங்கு மேலானவன். ஆசாரியனைக் காட்டிலும் நூறுமடங்கு மேலானவன் தந்தை. தந்தையைவிட ஆயிரமடங்கு மேலானவள் தாய். ஆகையினால் தாயையும் தந்தையையும் மறப்பவன் மகா பாதகனாவான்.

5. ஐசுவரியத்துக் கழகு நடக்கை. சௌரியத்திற்கு அழகு வாயடக்கம். அறிவிற் கழகு உபசாந்தி. கல்விக் கழகு வணக்கம். செல்வத்திற் கழகு நல்ல வழியில் செலவு செய்தல். சூரனுக் கழகு பொறுமை. தர்மத்துக்கு அழகு யாதொன்றையும் எதிர் பாராமலே செய்தல். இவை யெல்லா வற்றிற்கும் ஆதாரமானது நல்ல ஒழுக்கமேயாம். ஆகையினால் நல்ல ஒழுக்கத்தைக் கைவிடலாகாது.

6. ஒருவன் தான் தொடங்கிய செயலை முடிக்க முடியாமல் தயங்கி நிற்கும்போது எவன்வந்து உதவிசெய்து அதனைமுடிக்கின்றானோ அவனே தமையன். ஒருவனுக்குத் தலைபோகும்படியான துன்பம்வந்தபோது எவன் வந்து அவனை அவ்வாபத்திலிருந்து தப்புவிக்கின்றானோ அவனே தந்தை. ஒருவன் தன் பகைவரால் துன்பமடைந்து வருந்தும் பொழுது அவனை எவன் அத்துன்பத்தினின்று மீட்கின்றானோ அவனே அவனுக்குத் தெய்வம். ஒருவன் புத்தி கலங்கித் திகைத்திருக்கையில் அவனுக்கு யுக்தி புத்திகளைச் சொல்லிக் கொடுத்து வரப்போகும் நன்மை தீமைகளை எடுத்துச் சொல்லுகிறவன் எவனோ அவனே குரு. ஒருவனுக் குண்டாகும் நன்மை தீமைகளைத் தனக்கு வந்ததாக எண்ணித் தன்னா லியன்றதைச் செய்பவனே பந்து. ஒருவன் மனமறிந்து இவன் சொற்படி கேட்டு நடப்பவனே பிள்ளை—என இவ்வாறு நீதி நூல்கள் முறையிடுகின்றன. ஆகையினால் இதுவே உண்மையான பந்துத்துவமாம். கூடப் பிறந்ததாலும் பெற்றதாலும் வீணுக்கு உறவாடுவதாலும் வயிற்றில் பிறந்ததாலும் மாத்திரம் உறவாகக் கொள்வது வீண் மயக்கமேயாம்.

7. உலகத்தில் மனிதர்கள் சாகும் பொருட்டுப் பிறக்கின்றார்கள் பிறக்கும் பொருட்டு மரிக்கின்றார்கள். சரா சரங்களெல்லாம் ஸ்திரமானவை யல்ல. இது உலக இரகஸ்யம்.

8. மனிதன் எண்ணும் எண்ணங்களி லெல்லாம் பாப எண்ணங்களே மிகுதி. அவையெல்லாம் ஆபத்துக்கு இருப்பிடமாம். உலகத்தில் ஐசுவரியமும் பாபத்தைப்போல் துக்கத்தையே முடிவாகவுடையதாகிறது.

9. மனிதனுடைய ஆயுள் ஓரிலையின் நுனியிலிருக்கும் நீர்த் திவலையைப் போன்றது. ஸம்பத்தினால் உண்டாகும் கர்வம் இந்த அற்ப ஆயுளுடையமனிதனைப் படுத்தும் பாடு சொல்ல முடியாததா யிருக்கிறது—கவனிப்பீர்களாக.

வரகவி - திரு - அ. சுப்ரமண்ய பாரதி.

இல்லறம்—விவாகம்.

(423-பக்கத் தொடர்ச்சி)

வதூவரர் இருவரும் ஒரேபடுக்கையில் சயனிக்கவேண்டு மென்பதும் ஓர்விதி. எட்டிப் படுப்பதாயிருந்தால் தர்ப்பைப் புல்லால் முறுக்கின நீளமான கயிற்றை இருவரு மிடுப்பில் கட்டிக்கொண்டு படுப்பதும் விதி. தர்ப்பைப் புல்லுக்கு ஆகர்ஷண சக்தி (மின்சார சக்தி) அதிக மாதலால் அதன் வழியே இருவரது சக்தியும் ஆகர்ஷிக்கப்படும். இப்படி ஆகர்ஷிக்கும் போது புருஷ சக்தியே அதிகமாய்ப் பெண்ணுக்குச் சேரும். காரணம் முன் கூறப்பட்டது. இவ்வாறு ஆகர்ஷிக்கப்படும் சக்தி மூன்று நாட்களில் சரீரத்தில் கலந்து விடும். இது மாசற்ற சக்தியைக் குறித்தது. வியாதி முதலியவைகளால் விபரீதப்பட்ட கொடிய சக்தி உடனே சரீரம் முற்றும் வியாபித்துவிடும். மிகவும் கெடுதியையும் செய்யும். இதைத்தான் தொத்து வியாதி யென்பர் பெரியோர். மூன்று நாள் ஆறு வேளைக்குக் குறையாமல் ஔஷதங்களை உட்கொள்ள வேண்டும் என்று வைத்திய நூல்கள் விதித்ததும் இது பற்றியே யாம். ஆதலால் தான் மூன்று நாட்கள் முழுமையும் நாலா நாளில் முக்கால் பாகமும் வதூவரர்களுக்கு ஸ்நானம் விதிக்கப்படவில்லை. குறிப்பிட்ட காலத்திற்குள் பரவி இரத்தம் நரம்பு முதலியவற்றில் வியாபித்து விடுதலாலும், நோக்கத்தாலும், ஸ்பரிசத்தாலும்,தன் நாயகனென்று உள்ளன்போடும் மகிழ்ச்சியோடும் தன் கணவனைச்சிந்திக்கும் சிந்தனையாலும் பெண் சரீரம் பூர்ணமாய்ப் புருஷ சக்தியைக் கிரகித்துக்கொள்ளும். அடிக்கடி தன் கணவனுடன் சம்பாஷித்தலாலும் சரீரம் அவன் மயமாய் விடும்.

முன்பு கடாட்சம், பரிசம் இவற்றினால் சரீரங்கள் ஒன்றோடு ஒன்று தம் சக்தியை மாற்றிக்கொள்ளு மென்று கூறினோம்.இப்பொழுது தொனியும் கூடத் தன் சக்தியைப் பிறர் பொருள்களிற் சேர்க்கும் தன்மையுடையதென்று கூறுகிறோம். ஒருவன் பேசும்பொழுது சரீரத்தி னுட்புறத்துள்ள மாம்சமாகிய அணுக்கூட்டங்கள் பிராணவாயுவினா லுந்தப்பட்டு ஒன்றோடொன்று மோதிக் கொள்வதே தொனிக்குக் காரணமா மென்பது பதார்த்த நூலுணர்ந்த பெரியோர்களின் அபிப்பிராயமாம். இது, "மொழிமுதற்காரண மாமணுத் திரளொலி,எழுத்தது முதல்சார் பெனவிரு வகைத்தே" என்ற ஆப்த் வசனத்தினா லுணரப்படும். நாதப்பிரம்மோ பாசனை செய்யுமியல்புடைய பெரியோரு மிதனை யொத்துக் கூறுவார். சூக்குமை, பைச

ந்தி, மத்திமை, வைகரி என நால்வகை வாக்குகளுளவென்றும், அவற்றுள் வைகரி என்னும் வாக்கே செவிப் புலனுக்கு விஷயமாவ தென்றும், அது பிராண வாயு மூலாதாரத்தினின்று பிரமரந்திர மளவாக முட்டி நின்று காரியப்படுத்துவதா லுண்டாகு மென்றும், அப்படி யுண்டாகுந் தொனி உதான வாயுவுடன் பல், இதழ், நாக்கு, மூக்கு, அண்ணமாகிய இவற்றின் முயற்சியால் ஐம்பத்தோரட்சர சொரூப்மாகு மென்றும் மேலோர் கூறுவர். இவற்றை விரிக்க வென்ருல் நூல் மிகப் பெரிதாய்ப் பெருகுமாதலால், ஈண்டு அதிகங் கூருதொழிந்தோம். சைவாகமங்களில் வெகு விஸ்தாரமாய்க் கூறப்பட்டுள்ளதைக் கற்ருேர் வாய்க் கேட்டுணர்க. இதனுல் மூலாதாரத்தி னின்றும் அனுத்திரள் பிராண வாயுவினுல் செலுத்தப் பட்டுத் உதானவாயு வோடு கலந்து தந்ததா லோஷ்டாதிகளின் முயற்சியால் வெவ்வேறு வகைப்பட்ட எழுத்துக்களாய்ப் பிரிந்து செவிப் புலனுக்கு விஷயமாய் நிற்கும் என்பதை மட்டும் நாமுய்த் துணர்ந்து கொள்ளவேண்டும். ஒலி செவிக்கு விஷய மாங்கால் மேற்கூறியபடி பிராண வாயுவா லுந்தப்பட்டு உதான வாயுவுடன் கூடி வாயிலிருந்து வெளிப்படு மணுக்கள், வெளி வாயுவுடள் சம்பந்தித்து மனிதரது செவியினுட் செல்லும். இதனுல் பேசுபவனுடைய மாம்சம் சிறிது கேட்பவனுட் புகுமென்பது உணர்ந்துகொள்ளத் தக்கது. மிகச் சமீபத்தில் (அதாவது முகமும் முகமும் ஒரு சாணளவி லிருக்கும்படி) நின்று பேசினுல் அந்த மாம்சமே கிரகிக்கப்படும். தூரத்தில் செல்லச் செல்ல அம்மாம்சத்தின் சக்தியே பிரவேசிக்கும். அதிகதூரத்தில் (அதாவது நன்ருய்ச் செவியாற் கேட்கக்கூடிய தூரத்தில்) நின்று கேட்டால், அதன் சக்தி சிறிது சிறிதாகக் குறைந்து வாயுவே பிரவேசிக்கும். இது பற்றியே பாவிகளுடனும், கொடிய நோயாளிகளுடனும் பேசவே கூடாதென்றும், பேசவேண்டிய அவசியம் நேரிட்டால் தூரத்தில் நின்றே பேசவேண்டு மென்றும் வைத்திய நூல்களும் ஸ்மிருதிகளும் விதித்தன. மேற்கூறிய வியாதிக் காரர்களின் அதிக சமீபத்திலிருந்து சிறிதுநேரம் பேசின வைத்தியனுக்கு சச்சேல ஸ்நானம் விதிக்கப்பட்டது. இதனை வைத்திய நூல்களா னுணர்க. பேசுபவர்களுக்கும் கேட்பவர்களுக்கு மிடையில் திரை, பலகை, சுவர் முதலிய தடைகளிருந்தால் குற்றமில்லை யென்றும், கையில் நீர்ப் பாத்திரம் வைத்திருந்தால் குற்றமில்லை யென்றும், நனைத்துப் பிழிந்த வஸ்திரங்க ளிருந்தாலும் அவ்வளவு குற்றமில்லை யென்றும் கூறும் வைத்திய நூல்களு முண்டு. இவற்றை ஸ்மிருதிகளும் ஒப்புக் கொண்டன.

இதற்கு ஒரு திருஷ்டாந்தங் கூறுகின்ருேம். பதார்த்தங்களைப் பரிட்சித்து அறியும் வன்மை யற்ருர் இவ்விஷயத்தில் ஆக்ஷேபனை செய்வார்கள். ஆதலால் அவ்வாக்ஷேபனைக்கு இடமில்லாத படிக்கே இந்தத் திருஷ்டாந்தங் கூறப்படுகின்றது. தெளிவான ஒரு பெரிய கண்ணுடியைச் சுவரிற் சார்த்தி வைத்து, அதற்கு எதிரில் உயர்ந்த தொனியுண்டாம்படி பேசத் தக்கவனை நிறுத்தி, அவன் வாயினின்று புறப்படுகிற ஆவி அந்தக் கண்ணுடியில் தாக்கும் படியாய் அரைமணி நேரம் நன்ருய்ப் பேசச் சொன்னுல், அவன் வாயிலிருந்து புறப்படுந் தொனிவடிவான ஆவி அந்தக் கண்ணுடியில் தாக்கி அதை மங்கலாக்கிவிடும். அது புலர்வதற்குள் ஒருமெல்லிதும் வெள்ளிது மான சிறு துணியால் துடைத்து, அந்தப் பாகம் உள்ளே பொதியும்

துணியைச் சுருட்டிப்பின் நெருப்பிற் கொளுத்தி அது பற்றியெரியும்போது அணைத்து விடுக. பிறகு அந்தப் புகையை முகர்ந்தால் மாம்ச நாற்றம் வீசக் காணலாம். கிராணேந்திரியம் அதிகக் கூர்மையாக வுள்ளவர்கள் எளிதிற் கண்டறியலாம். தெளிவாகவும் சந்தேக மறவும் காணலாம். இதனால் விளக்கப்படுவது யாதென்றால் மாம்சமே தொனிரூபமா மென்பதேயாம். அணுமயமாதலாற் கட்புலனுக்குப் பிரத்தியட்ச மாகாது. மாம்சத்துக்கு ஒருவித நாற்ற முண்டாதலால் அதனைக் கிராணேந்திரியத்தினால் நன்றாயறியலாம். இதை யநுசரித்தே பிரசங்கம் செய்வதையே தொழிலாக வுடையவர்களுக்கு வயிற்று நோய், மூல நோய், க்ஷயம், இருதயநோய், காசம் முதலிய வியாதிகளுண்டா மென்றும், தீபன சக்தி குறையும் என்றும் வைத்திய நூல்கள் கூறுகின்றன. இருதய பல மில்லாதவர்களுக்கு அதினின்றும் உதிரம் பெருகுவதாகிய கொடிய நோயுண்டாவது முண்டு. இவை பிரத்தியட்சமாம். இதுகாறும் கூறியவதனால் நோக்கம், பரிசம் இவைகளைப் போலவே தொனியுமாம் என்பது காண்க. உற்று நோக்குவார்க்கு இவை யெல்லாம் பரிசம் என்கிற ஒரு சொல்லின் பொருளாகவே காணலாகும். ஆதலால் இவை மூன்றினாலும் ஒரு சரீரத்தின் சக்தி மற்றொரு சரீரத்தில் பிரவேசிக்கு மென்பது புலப்படும். இந்தத் தொனி வடிவாகிய மந்திரங்களினால் பாம்பு தேள் இவற்றின் விஷம் விலகுவதும் பிரத்தியட்சத்தில் காண்க. பிளவை முதலிய கட்டிகளும் மந்திரசக்தியால் நீங்குவன காண்க.

இது கொண்டு யாம் விளக்குவது யாதெனில், விதிப்படி பாணிக்கிரகணம் செய்யப்பட்ட சிறிய பெண், கணவனது நோக்கத்தாலும் அவனைத் தான் நோக்குவதாலும், பரிசத்தாலும், பேச்சினாலும் கணவன் சக்தியைக் கிரகிப்பாள் என்பதே. இது ஒரு நாள் மட்டும் நடந்தால் நிலை கொள்ளாதாதலால் மூன்று நாள் முழுமையும் சென்றால் நிலைபெறும். அது இரத்தத்துடன் கலந்து நரம்புகளினுள்ளும் பிரவேசித்துவிடு மானால் பிறகு சரீரத்தை விட்டு எளிதி லொழியாது. அத்துடன் நிறுத்தி விட்டால் நாளடைவில் அச்சக்தி கெடுமாதலால் அம்மாது தன் கணவனை விட்டு நீங்காமற் கூடியே இருக்கவேண்டும். அது பற்றியே சேஷ ஓமம் ஆனபின் ஔபாசன பாண்டத்துடன் பெண்ணைப் புருஷன் வீட்டுக் கனுப்பிவிடுவது பூர்வ காலத்துப் பிராமணர்கள் வழக்கம். அப்பெண் மங்கைப் பருவ மாம்வரையில் கணவனைப் பிரியாமலிருப்பதே நலம். தாய் வீட்டிலேயே பெண்ணை வைத்துக்கொண்டும், ருதுவானபொழுது சோபன கல்யாண வேடிக்கைகள் செய்தலும், ருதுசாந்தி யென்று பேரிட்டுக்கொண்டு மானவெட்கமில்லாமல் பெண் வீட்டாரிட மிருந்து பிள்ளை வீட்டுக்காரர்கள் அளவற்ற சொத்துக்களைப் பறித்துக் கொள்வதும் பூர்வ காலத்துப் பிராமணர்கள் வழக்கமல்ல. இவைகள் க்ஷத்திரிய வைசியர்களுடைய செய்கைகளாம். இவ்வழக்கத்தையே யிக்காலத்துப் பிராமணர்கள் கையாடுகிறார்கள். தமது குலாசார வொழுக்கங்களை முற்றும் மறந்து பொருள் பறிப்பதிலேயே நோக்கமா யிருக்கிறவர்கள் பின் எதைத் தான் செய்யார்கள்! நிற்க.

இவ்வாறு பாணிகம் செய்துகொண்டு தன் கணவனைவிட்டு நீங்காமல் அவன் பணிவிடை செய்வதிலேயே கருத்தைச் செலுத்தும் மங்கை நாளடைவில் தன் கணவன் குணத்தைக் கிரகித்துப் பாலும் சர்க்கரையும் கலந்தது போன்ற இனிய குணமுடையவளாய், எக்காலத்தும் அவன் கருத்

தொடு மாறுபடாதவளாய், தர்மார்த்த காமங்களை மனமொத்து அநுபவித்து, உலகத்துக்கு நன்மை செய்யத்தக்க சற்சந்தான விர்த்தியை யுண்டாக்கி, எல்லாரும் புகழ வாழ்ந்து, அந்தியத்தில் தனது புண்ணியத்தால் அடையத்தக்க போக வுலகங்களையோ என்று மீளாத முத்தி யுலகத்தையோ அடைவாள் என்பது நமது முன்னோர்கள் தமது பேரறிவாற் கண்டறிந்தவுண்மை. இத்தகைய மனைவியை யடைந்த பிராமணனுக்குத் தபசித்திகள் எளிதி லுண்டாகும். அந்தப் பெண்ணும் புருஷனுடைய புண்ணிய பலன்களிற் பாதிப்பாகம் பெறுவாள். இதற்கு மாறாகச் செய்யப்படும் விவாகங்கள் அவ்வளவு சிலாக்கியமாகா வென்பது முன்னோர் அபிப்பிராயம். எனெனில் அவ்வித விவாகங்கள் பூலோக வின்பங்களை யனுபவிக்க மாத்திரம் பயன் படுமேயன்றி மோட்ச சாதனத்துக்குப் பயன் படுவதில்லை. எனெனில் குறிப்பிட்ட கணவன் பணிவிடை யாதிகளும், ஔபாசனம் முதலிய தெய்வகிருத்தியங்களு மில்லாமையால், அவர்கள் மனம் பலவழிகளில் அலையும்; முக்கியமாய்ப் பிரத்தியட்சமா யுள்ள உலகானுபவங்களிலேயே பிரவர்த்தித் திருக்கும். இளமையில் எது மனதிற் படிந்ததோ அதுவே யுறுதிப்படும். அப்பிரத்தியட்சமாகிய தெய்வ சித்தம் உண்மையா யுண்டாவதரிது. உண்டானாலும் பிறர் மெச்சுவதற்காகவே யன்றித் தனக்கென்றிராது. எப்பொழுதும் பல பொருள்களிலும் அலைந்துகொண் டிருக்கும் இயல்புள்ள மனம் அளவற்ற எண்ணங்களைக் கருதி யலையாநிற்கும்; ஒரு நிலையில் நிற்காது. அவ்வாறு அலையாமல் நிற்பதற்கு இந்தப் பாலிய விவாகமே தகுதி யுடையது. மோட்சத்துக்கு மார்க்கம் மனம் ஒரு வழிப்பட்டு நிற்பதேயாமென்பதைத் தாயுமானவர், பட்டணத்துப்பிள்ளையார் முதலிய மஹாத்மாக்களின் வசனத்தினாலும், மற்றுமுள்ள பெரியோர்கள் கூறியவற்றாலும் யாவரும் உணர்ந்திருப்பார்கள். அஷ்டாங்கயோகம் செய்வதும் மனதை ஒரு நிலையில் நிறுத்தப் பழகும் பழக்கமேயன்றி வேறில்லை. அந்த யோகம் ஆடவர்களுக்கு எளிது. மகளிர்க்கு எளிதல்ல. நமது ஔவையார் போன்ற புண்ணியவதிகளான பெண்களைத் தவிர வேறுள்ள பெண்களுக்கு மனம் நிலை கொள்ளாமல் கண்ட பொருள்களை யிச்சித்து, அதை யடையும் மார்க்கங்களை ஒன்றொன்றாக ஆராய்ந்து, கடைசியில் ஒன்றிலும் சித்தி பெறாமல் பரதவித்தே நிற்கும். இத்தகைய பெண்களால் கணவனுக்கும் சுகமிராது. அவன் செய்யும் தவசிலும் சித்திபெறான். இருவர்க்கும் இகபர மிரண்டிலும் துக்கப் பிராப்தியே யொழிய நன்மை சித்தியா வென்பதும் நமது பெரியோர் கருத்து. இனி நமது பெரியோர்கள் இவ்விதமான கௌரியை விவாகம் செய்து கொடுப்பதால் அப்பெண்ணுக்கு எவ்வகையான நன்மையைச் சிந்தித்தார்கள் என்று கவனிப்போம். அந்த நன்மை மஹா பெரிது. அது கூறுவோம். (தொடரும்.)

சிவானந்தசாகர யோகீஸ்வரர்.

சண்டேசுவர நாயனார்.

சோழ மண்டலத்தில் திருச்சேய்ஞ்ஞலூ ரென்னும் பதியில் பிராமண குலத்திலவதரித்த எச்ச தத்தன் என்பவரின் மனைவி பவித்திரை வயிற்றில் விசார சருமர் என்பவர் அவதரித்தார். அவருக்கு ஐந்தாம் வயதில் பூர்வ ஜன்ம வாசனையினால் வேதாகமங்களைக் கற்பிப்பாரின்றித் தாமே

யறியும் அறிவு உண்டாயிற்று. தாய் தந்தையர் அவருக்கு ஏழாம் வயதில் உபநயனஞ் செய்து ஞானசாரியர்களைக் கொண்டு வேதாத்தியயனஞ் செய்விக்கத் தொடங்கினர். அவ்வாசிரியர் வேதாக மங்களைக் கற்பிப்பதற்கு முன்னமே, சீடன் தானே அறிந்து கொள்ளும்படி அமைந்திருக்கின்ற புத்தியின் திறத்தைக் கண்டு ஆச்சரிய மடைந்தனர். சிறுவயதிலேயே சாந்த குணத்தை யுடைய விசார சருமர் ஆன்மாக்களாகிய நாம் அனாதி மலபந்த ரென்பதும், அம்மல சக்தியைக்கெடுத்து அதனால் விளங்காது தடைப்பட்ட சிவதத்துவத்தை விளக்கும் பொருட்டு சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரஹம், என்ற பஞ்ச கிருத்தியங்களையும் செய்பவர் ஒருவர் உண்டென்பதும், அவருக்கு ஷட் குணங்களும் இன்றியமையாத தென்பதும், இவை யாவு முடையவர் பரம சிவனே என்பதும், அவர் அத்தொழிலியற்றுதல் தமது சிவ சத்தியாலாகு மென்பதும், அதைப்பற்றி அவ்விருவரே நமக்கு மாதா பிதாக்களென்றும், அவர்களிடத்தே நாம் அன்பு பூண்டொழுகவேண்டு மென்றும், அவ்வன்பைச்செலுத்துவதற்கு இம்மானிடப் பிறவியே மேலான தென்றும், அவ்வன்பை மற்றோர் பிறப்பில் செய்வோமெனின் அப்பிறப்பில் இம்மானிடப் பிறவி பெறுதற்கரிய தென்றும், (இப்பிறவி தப்பினு லெப்பிறவி வாய்க்குமோ எது வருமோ வறிகிலேன்) இப்பிறவியிற்றானே இன்னஞ் சில நாட்சென்ற பின் செய்வோமெனின் (இன்றைக் கிருந்தாரை நாளைக்கிருப்பரென் றெண்ணவோ திடமில்லையே) இப்பிறவி நீங்கும் காலம் அறிதற்கரிய தென்றும், அதனால் அன்பு செலுத்த இவ்வமயமே தக்கதென்றும் துணிந்து கொண்டனர். இத்துணிவு தோன்றலும் அவருக்குப் பரமசிவனிடத்தில் மெய்யன்பு மேன்மேலும் வளர்ந்து வந்தது.

ஓர் நாள் அவர் தம்மோடு அத்தியயனம் செய்யும் சிறுவர்களை யழைத்துக்கொண்டு அவ்வூரார்க ளுடைய பசுக்கூட்டங்களுடன் சென்றபோது ஓர் பசு, மேய்ப்பானாகிய இடையனைக் குத்தப் போயிற்று. அவ்விடையன் சிறிதும் பாபத்துக் கஞ்சானாகி அப்பசுவைத் தடியாலடிக்கக் கண்ட விசார சருமர் மிக்க பதை பதைப்போடு அவனருகிற் சென்று இன்னும் அடியாதபடி அவனைத் தடுத்து, பசுக்களின் வரலாற்றையும் அவற்றினிடத்துண்டாகும் பஞ்ச கவ்வியங்கள் பரமசிவனுக் கபிஷேகத்திற்குபயோகப் படுவதையும், சைவ சமயத்திற்குரிய விபூதிக்கு மூலம் அப்பசுவின்சாணமே யாதலையும் சிந்தித்து அப்பசுக்களைத் தாமே மேய்க்க விரும்பி, அவ்விடையனைப் பார்த்து 'இனி நீ மேய்க்க வேண்டியதில்லை; நானே மேய்ப்பேன்' என்று அதற்கு அப்பசுக்களுக்குரிய பிராமணர்களின் அனுமதி பெற்றுக் கொண்டார். அதன் பிறகு அவர் அப்பசுக்களைத் தினந்தோறும் மண்ணியாற்றங்கரைகளிலுள்ள காடுகளிலும் வயலோரங்களிலும் ஓட்டிக்கொண்டு போய் மேய்த்துத் தண்ணீர் காட்டி வெயில் காயும் போது நிழலில் நிறுத்தி, மாலைப்போதில் சமித்துகள் சேகரித்துக் கொண்டு அஸ்தமயத்திற்கு முன் அப்பசுக்களை அவரவர்கள் வீட்டிற் கொண்டுபோய் விட்டுப் போவார். இப்படி யிருக்கையில் பசுக்கள் மிகப் பெருகி ஒரு குறைவு மின்றி மடி சுரந்து பாலை மிகவும் தந்தன. பிராமணர்கள் நித்திய கருமத்தின் பொருட்டு விட்டிருக்கும் பசுக்கள் விசார சருமர் மேய்க்கத் தொடங்கிய பின் முன்னிலும் அதிக மாகப் பால் கொடுப்பதைக் கண்டு சந்தோஷ மடைந்

தனர். பசுக்கள் பலவித உபசரிப்பினாலும் அளவற்ற களிப்படைந்து தங்கள் கன்றுகளை வீட்டில் விட்டுப் பிரிந்துவந்த வருத்தமுந் தோன்றாது தங்களை மேய்க்கும் விசார சருமர் அருகிற் போய்க் கனைத்து மடி சுரந்து பாலைத்தாமே பொழியும்.

அதைக் கண்ட விசாரசருமர் அந்தப்பால் பரமசிவனுக்குத் திருமஞ்சனத்திற்குத் தகுதியுடையதென நினைத்துச் சிவார்ச்சனையில் பிரியமுற்று மண்ணியாற்றங் கரையில் ஓர் ஆத்திமரத்தின் கீழ் மணலினால் கோவில் கோபுரம் சிவலிங்கம் முதலியன நியமித்து அர்ச்சனைக்குரிய பத்திர புஷ்பங்களைச் சேகரித்து வைத்து விட்டுப் புதியகுடங்களை வாங்கி வந்து கறவைப் பசுக்களிடத்தில் வைத்து பாலைக் கறந்து கொண்டுபோய் ஆலயத்தில் வைத்துச் சிவபிரானுக்குத் திருமஞ்சன மாட்டித் திவ்ய பத்திர புஷ்பங்களாலர்ச்சிக்கப் பரமசிவன் அவ்விலிங்கத்தில் ஆவிர்ப்பவித்து, விசார சருமர் செய்யும் அர்ச்சனையை யங்கீகரித் தருளினர். விசார சருமர் சிவபூஜைக்குரிய பொருள்களில் கிடையாத வற்றை மானசமாகக் கிடைத்தவைகளாகக்கொண்டு விதிப்படி அர்ச்சித்து வந்தனர்.

பசுக்கள் அபிஷேகத்திற்கு வேண்டிய பாலைப் பொழிந்தும் பிராமணர்களுக்கும் முன் போலவே குறைவறப் பாலைக் கொடுத்தன. இப்படி நெடுநாள் நடந்து வருகையில் அதைக் கண்ட ஒருவன் அதில் உண்மையை யறியானாகி அவ்வூர் பிராமணர்களுக் கறிவித்தனன். பிராமணர்கள் எச்சதத்தரை யழைத்து, ஓமாகுதியின் பொருட்டு பால்கறக்கும் பசுக்களையெல்லாம் உம்முடைய புத்திரன் விசார சருமன் அன்புடன் மேய்ப்பவன் போல் ஓட்டிக்கொண்டு போய்ப் பாலைக் கறந்து விருதாவாக மணலிலே சொரிந்து விளையாடுகிறானெனக் கோஷ்ட மிட்டனர். அதைக் கேட்ட எச்சதத்தர் பயந்து "இச்செய்கையை இதற்கு முன் நான் சிறிது மறிந்திலேன். இக்குற்றத்தைத் தாங்கள் க்ஷமிக்க வேண்டும். இனி இவ்வாறு நடக்குமாயின் அக்குற்றம் என்னுடைய தாகும்" என்று சொல்லி அனுமதி பெற்றுச் சென்றார்.

மறுநாட் காலையில் அவ்விஷயத்தைச் சோதிக்க விரும்பி விசாரசருமர் பசுக்களை மேய்க்க ஓட்டிப் போனபின் அவரறியாதபடி எச்சதத்தர் அவர் பின்னே சென்று மண்ணியாற்றங் கரையிலுள்ள ஒரு குரா மரத்தில் ஏறி ஒளித்திருந்தனர். விசார சருமர் வழக்கப்படி ஸ்நானம்செய்து மணலினால் கோவிலும் சிவலிங்கமும் நிருமாணித்து அபிஷேகத்திற்கு வேண்டியயாவும் சேகரித்து மிக்க அன்புடன் அபிஷேகம் அர்ச்சனைகள் செய்வதைக்கண்ட எச்சதத்தர் மிக்க கோபங் கொண்டு அதி சீக்கிரமாக இறங்கிப் போய்க் கடுஞ் சொற்களாற் பேசித் தம்கையிலுள்ள தண்டத்தினால் விசார சருமரின் முதுகிலடிக்க அவருடைய மனம் சிவார்ச்சனையில் பதிந்திருந்த படியால் அவருக் கொன்றும் புலப்படவில்லை. எச்சதத்தர் மிகக் கோபித்துப் பின்னும்பலமுறை,யோங்கியடிக்க அப்போதும்விசார சருமர் அவ்வடிகளாலாகியவருத்தந்தோன்றாதுஅபிஷேகத் திருத்தொண்டிற்றவிராதிருந்தனர்.

அவருடைய உள்ளன்பை யறியாத எச்சதத்தர் மிக்க கோபங்கொண்டு திருமஞ்சனப் பாற் குடத்தைக் காலினால் உதைத்துத் தள்ளினார். அதைக்கண்ட விசார சருமர் அப்படிச் செய்தவர் தம் பிதா வென்பதை

யறிந்தும் அவர் செய்தது சிவாபராதமாதலால் அவர் பாற்குடத்தை யுதைத்த காலைத் துணிக்கக் கருதித் தம் முன் கிடந்த சிறுகோலை யெடுக்க அது மழுவாயிற்று. அதனால் அவர் காலை வெட்டி சிவபூஜைக்கு நேர்ந்த இடரை நீக்கி முன்போல அர்ச்சனை புரியப் பரமசிவன் அவர் அன்பிற் கிரங்கிப் பார்வதியுடன் இடபா ரூடராய்த் தோன்றி யருளி அவரைத் தம்முடைய திருக்கரங்களா லெடுத்து நீ நம்பொருட்டு உன்பிதாவின் காலைத் துணித்தனை. இனி நாமே உமக்குப் பிதாவென் றருளிச்செய்து, அவரை யணைத்துக்கொண்டு அவர் சரீரத்தைத் தடவி உச்சிமுகந் தருளினர். சிவபிரான் திருக்கரத்தால் தீண்டப்பட்ட விசார சருமருடைய திருமேனி சிவமயமாகத் திவ்யப் பிரகாசத்தோடு விளங்கிற்று.

சிவபெருமான் விசார சருமரை நோக்கி 'நம்முடைய தொண்டர்களுக்கெல்லாம் உன்னைத் தலைவனாக்கி நாம் ஏற்றுக்கொண்ட அமுதம், பரிவட்டம், புஷ்பம் இவைகள் உனக்கே கிடைக்கும்படி சண்டேஸ்வர பதத்தைத் தந்தோம்' எனத் திருவாய் மலர்ந்து தம்முடைய சடையிலுள்ள கொன்றை மாலையை எடுத்து அவருக்குச் சூட்டினர்.

விசார சருமர் சகலரும் ஆரவாரிக்க எங்கும் புஷ்ப மழை பொழியவும், சிவகணங்கள் பாடி யாடிக் களிகூரவும், வேதங்கள் கோஷிக்கவும் சற்சமயமாகிய சைவ சமயம் நிலை பெறும்படி பரமசிவனைத் தரிசித்து அவரால் அளிக்கப்பட்ட சண்டேஸ்வர பதத்தை யடைந்தனர். சிவத் துரோகம் செய்து சண்டேஸ்வரரால் தண்டிக்கப்பட்ட எச்சதத்தரும் அக்குற்றம் நீங்கித் தம் சுற்றத்துடன் சிவலோகத்தை யடைந்தனர்.

இஃது பெரிய புராணத்திலிருந்து நமது நேயர்களுக்காகச் சுருக்கமாக வரையப்பட்டது.

S. துரைசாமிப் பிள்ளை.

ஓர் வேண்டுகோள்.

அருமைச் சோதர சோதரிகாள்!

நாளது வைகாசிமீ (11-ம் தொகுதி, 14-5-20) வெளியான நமதானந்தனை வாசித்து வருங்கால் "இந்து நண்பர்க்கோர் எச்சரிக்கை" என்ற தலையங்கத்தைக் கண்டு படித்துப் பார்க்க இந்தத் தேசத்தில் நாம் உதித்த படியால் எம் உதிரம் கொதிப் படைவதோடு எம் மனமும் சொல்லொணு மனத்தாங்கல் அடைந்தது.

ஆ! என் தேசவாசிகளே! பாரத புத்திரர்களே! சகோதர சகோதரிகளே! ஓர் விஞ்ஞாபனம்:—

குற்ற மிருப்பின் ஆன்றோர் பொறுப்பது கடமை. நந்தம் தேசத்தின் நாம தேயத்திற்கேற்ப நம் தேசம் இந்துக்களால் அதாவது இந்து சமயத்தவர்களால் நிரம்பி யிருந்தது என்பது குன்றின்மேலிட்ட தீபம். இவ்வண்ண மிருக்கப் பற்பல மதங்கள் தலையெடுத்தாடுவானேன் என்றோர் கேள்வி பிறக்கலாம். இம்மண்ணுலகமே அடிக்கடி பூகம்ப நிகழ்ச்சிகளால் மாறி வரும்பொழுது இம்மண்ணுலக வாசிகளாகிய மானிட வர்க்கங்கள்

மாறுவது சகஜமே. ஏதோ கால வேறுபாட்டால் இக்கதி யடையலானோம். "வெள்ளம் வருமுன் அல்லோ அணைகோலிக் கொள்ள வேண்டும்" போனதைப் பற்றி இனி வருத்தம் அடைவதில் யாது பயன்? ஆனால் இன்னும் கண் விழியாது அயர்ந்த நித்திரை செய்வீர்களே யானால் இன்னும் இதற்கும் கீழான ஸ்திதி யடைவதோடு இந்து மதம் என்ற பேரே அடியோடு நசித்துப்போம்.

சுமார் 13000 சகோதர சகோதரிகள் "ஆனந்தனை"ப் படித்தும் இன்னும் இத்தகைய நிலைமைக்கு இடங்கொடுப்பதும்,இத்தகைய நிலையிலிருப்பதும் ஆச்சரியத்தை விளைவிக்கின்றனவே தவிர வேறில்லை. இன்னும் இத்தகைய நிலையி லிருப்பீர்களே யானால் நம் பாரத மாதா நெஞ்சம் புண்ணாகி வெடித்து விடாதோ! அன்னவள் இரத்தக் கண்ணீர் சொரிய மாட்டாளோ!

கிறிஸ்து மதத் தலைவர்களை நாம் குறை கூறுவதில் யாது பயன்? ம-ா-ா-ஸ்ரீ, கனம் பத்திரிகாசிரியர் அவர்கள் கூறியிருக்கும் குறிப்பை யாவரும் பன்முறையும் வாசித்து உய்த்துணர வேண்டுகிறேன். அதைத் தங்கப்பெட்டியில் அடக்கம் செய்து கொள்ளவும் விருப்பம் உற்றேன்.

"நமது மக்களை அன்னிய மதம் போதிக்கப்படும் பாடசாலைகளுக்கு அனுப்புவதில்லை. அன்னியமத மாதர்களைக் கொண்டு நமது பெண்களுக்குக் கல்வி போதிப்பதில்லை. அவர்கள் சகவாசத்தி லிருக்க ஒரு வினாடியும் விடுவதில்லை என்று ஆண்டவன் முன்னிலையில் சத்தியம் செய்து கொள்ளுங்கள்." என்று கூறியிருப்பதை வாசித்து மறந்து விடாமல் சாதனையில் நிறைவேற்றும் வண்ணம் வேண்டுகிறேன்.

ஆனால் இன்னொரு விஷயம் ஈண்டுக் குறிப்பிடாம லிருக்க என்மனம் தாளவில்லை. நந்தம் தேசத்தில் கிறிஸ்தவர்களில் பெரும்பாலார் யாரென்று ஆராய்ந்தால் உயர்ந்த ஜாதியாரென்று அகங்காரம் கொண்டிருக்கும் வகுப்பாரால் வேண்டுமென்றே தாழ்ந்த வகுப்பாரென்று கொள்ளப்பட்டவர்களும், மேற்கண்டவர்களால் தாழ்ந்த ஜாதியார் என்று கொள்ளப்பட்டவர்களுமே என்பதை வெள்ளிடை மலைபோல் தெளியக் காணலாம்.

உயர்ந்தவர்களென்று கருதி யிவர்களால் கொள்ளப்படுகிற ஷை தாழ்ந்த வகுப்பாரில், எவரேனும் ஆத்ம பக்தி யுள்ளவர்க ளாகவாவது, கல்வி செல்வம், நாகரீகம் இவைகளில் மேம்பாடடைந்தவர்களாகவாவது இருந்தாலும், ஜாதி என்ற பெருநோய் அவர்களைப் பிடித்தாட்டிச் சீர் குலையச்செய்கிறது. நாகரீகம், நாகரீகம், என்றும், சமத்துவம், சகோதரத்வம் என்றும், சகோதரர்களே, சகோதரர்களே என்றும், எம்மதமும் சம்மதமே, எக்கடவுளும் ஒன்றே என்றும் ஓயாது இடி முழக்கம்போற் காதைத் துளைக்கும் இவ்விருபதாம் நூற்றாண்டிலும் கூட, கண்டனக் கூட்டங்களும் வருணாசிரமத்தை நிலை நிறுத்த வருணாச்சிரமதரும கான்பரென்ஸுகளும் நடைபெறுமென்றால் நம் இந்து நாடும், இந்து மதமும் சீர்குலையு மென்பதில் என்ன தடை?

கிறிஸ்தவர்கள் சிற்சில விஷயங்களில் ஒன்று படாவிட்டாலும், சில விஷயங்களில் ஒன்று பட்டு வாழுகிறார்களே. இதைக் கண்ணாரக் கண்டும்

காதாரக் கேட்டும் இன்னும் நாம் மௌனம் சாதித்தால் இந்து மதத்திற்கு ஹானி உண்டாகுமே.

நான் கிறிஸ்தவனே. நான் பிறந்தது கிறிஸ்து சமயமே. என் மூதாதைகள் கிறிஸ்து சமயத்தில் எவ்வாறு சேர்ந்தவர்களென் றாலோசித்தால், இந்தச் சமய ஞானம் இல்லாதவர்க ளானபடியாலும், ஜாதி என்ற பெருநோய் இந்நாட்டில் தன் தலையை விரித்துத் தலை கீழாக ஆடின தாலுமே என்பது வெளிப்படை.

இனிமேலாவது சமத்துவம் பாராட்டுவீர்களோ, இன்னும் கும்பகர்ணனுடன் சகவாசம் செய்வீர்களோ. சமீபத்தில் நடைபெற்ற ஓர் சம்பவத்தை ஈண்டுக் குறிப்பிட விரும்புகிறேன்: இராமநாதபுரம் ஜில்லாவில் விருதுபட்டிக்கு மேற்கே 18-மைலுக் கப்பால் தும்மாப்பட்டி என்ற கிராமம் இருக்கிறது; அவ்வூரில் பஞ்சம சகோதரர்கள் உயர்ந்த வகுப்பார் என்று கருதுகிறவர்களின் தெருவீதி வழி செல்லக் கூடாதாம். ஆ! என்னே மடமை! என்னே அறியாமை! என்னே மந்தபுத்தி! அந்தோ! என்ன பரிதாபம்! மகமதிய மதத்தில் சேரலாமென்று எண்ணி இப்போது அச்சகோதரர் 200-பேர்களில் 84-ஆண்மக்கள் தலைமயிரைச் சிரைத்தும் சுன்னத்துச் செய்து கொண்டு மிருக்கிறார்களாம்.

இவ்விஷயம் நாளது சித்திரைமீ வெளியான "நாடார் குலமித்திரன்" என்ற மாத சஞ்சிகையில் ம-ா-ா-ஸ்ரீ, கனம் பத்திராதிபர் அவர்களால் வெகு விரிவாக எழுதப்பட்டிருக்கிறது. இதைப் போன்ற சம்பவங்கள் பலவுள. விரிக்கிற் பெருகுமென்றே இத்துடன் விடுத்தனம்.

ஆனரபில் M. C. ராஜா அவர்கள் சட்ட சபையில் பிரவேசித்தும், இன்னும் பற்பலர் தாலூகா போர்ட் முனிசிபல் கௌன்சில்களில் மெம்பராக அமர்ந்தும், துரைத்தன இலாகாக்களில் எத்தனையோ பேர் உத்தியோகத்தி லமர்ந்தும், 26-எழுத்து மட்டும் கற்றவர்களோடு சமமாய் ரெயில்வேக்களிலும், கப்பல்களிலும் பிரயாணம் செய்தும், இன்னும் ஜாதிபேதத்தை இவ்வளவு பாராட்டி வந்தால் இந்து மதம் க்ஷீணதசை அடையுமென்பதில் சந்தேகமென்ன?

தீண்டப் படாதென்று சிலரை ஒதுக்கி வைத்திருந்ததால் அவர்கள் அன்னியமதம் புகுந்தார்கள். சிறிதளவாவது நன்மை பெற்றார்கள். மகமதிய மதத்திலாவது, கிறிஸ்து மதத்திலாவது அவர்கள் சேர்ந்து சிறிது கல்வி கற்று வெளிவந்து விட்டால் அவர்களுக்குச் சமமரியாதை அளிக்கின்றீர்களே. என் முன்னாலேயே சம மரியாதை அளிக்கப்படாது?

நம் பாரத மாதா இதற்காகவா நம்மை ஈன்றெடுத்தாள்? இந்திய மாதா வயிற்றில் நாம் இதற்காவா உற்பத்தியாகி ஜனித்தோம். சகோதரர்கள் இதை மறந்து வகுப்புத் துவேஷம் கொண்டிருந்தால் அவர்கள் சிறிதளவாவது மேன்மை யடைய வழி தேடுவது சுபாவந்தானே. அவர்களும் ஆறறிவு படைத்த மானிடப் பிறவிகள் தாமே. மேலும் அவர்கள் வலிய அழைக்கப் படுவதால் புறமதத்தில் சுலபமாகப் போய்ச் சேருகிறார்கள்.

"அரிதரிது மானிடராதல் அரிது" என்று ஆன்றோர் கூறியிருக்கின்றனரே. கடவுளால் உண்டாக்கப் பட்ட இம்மானிடனைக் கேவலம்

நாய், கழுதை, பன்றி, நரி முதலிய கடைப்பட்ட ஜந்துக்களுக்கும் கீழாக மதித்து நடத்தினால் எல்லாம் வல்ல பரம்பொருள் இதற்குச் சம்மதிப்பாரோ?

"ஓர் பெண் கிறிஸ்து சமயி ஆனதற்காக இவ்வாறு எழுதுவானேன்" என்று கலக்கமுறுவீர்களோ. சோதர சோதரிகளே, இந்து சமயம் செழித்தோங்கவும், இந்தியா என்ற நம் பாரதமாதா மேன்மை யடையவும், தாயானவள் மேன்மை யடைய நான் செய்ய வேண்டிய கடமையை நினைத்தும் எழுதலானேன்.

இன்னும் ஓர் விஷயம்: கிறிஸ்து சமயத்திற்கோ, மகம்மது சமயத்திற்கோ போவது இந்து சமய ஞானம் இல்லாததனாலேயாகும். கிறிஸ்துவப் பாதிரிமார்கள் பள்ளிக்கூடங்களில் "பைபில்" என்ற தங்கள் வேதத்தைக் கட்டாய பாடமாகவும், ஒழுங்காகவும் நடத்தி வருவது போலும், மகம்மது சமயத்தவர் "கொரான்" என்ற தங்கள் வேதத்தை ஒழுங்காகப் படித்து வருவது போலும், என் உங்கள் குழந்தைகளுக்கு இந்து சமய ஞானத்தை ஊட்டக்கூடாது? மேலும் அன்னவர்கள் மதவிருத்திக்காக பிரசார வேலை செய்வது போல் நீங்களும் என் செய்யக்கூடாது.

சமய ஞானம் இல்லாவிடத்து தேசிய ஞானம் உண்டாகாதென்றும், தேசிய ஞானம் இல்லா விடத்து சுய ஆட்சி கிட்டாது என்றும் தேச பக்தர்கள் கூறி வருகின்றார்களே.

இதையாவது கவனித்தீர்களா? சற்று கவனித்துப் பாருங்கள். இத்துடன் நிறுத்துகின்றனம். இத்தியாதி விஷயங்களைக் கவனித்து நடந்தால் இந்து சமயமும் இந்து நாடும் செழித்தோங்கு மென்பதில் என்ன தடை? குற்றம் இருந்தால் ஆன்றோர் பொறுக்க மறுமுறையும் தாழ்மையாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

எல்லாம் வல்ல பரம கருணாநிதியாகிய பரம்பொருள் கருணை பாலிப்பாராக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

S. ஏசுதாசன், க்ஷத்திரிய வித்தியாசாலை, மேலக்கோட்டையூர்.

குறிப்பு:—சகோதர சகோதரிகளே! நமது நண்பர் கூறும் மேற்கண்ட எச்சரிக்கைக்காக நாம் நன்றியோடு அவருக்கு வந்தன மளிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். அவருடைய சகோதர வாஞ்சையும் நம் தாயாகிய பாரத மாதாவி னிடத்தில் அவருக்கு ஏற்பட்டிருக்கும் பக்தி விசுவாசமும் புகழத் தக்கவை. மேலும் நம் தாய் நாட்டின் க்ஷேமத்திலும் நமது தெய்வீக மதத்தின் பாது காப்பிலும் நமக்குச் சிரத்தையும் ஊக்கமும் உண்டாகும் வண்ணம் அவர் மொழிகள் ஒரு தூண்டுகோலாக உதவுமென்று நம்புகிறோம். நம்மவர், கையிலுள்ள தங்கத்தை அதன் மகிமை யறியாது கீழெறிந்துவிட்டு மதிமயங்கி அன்னியன் கையிலிருக்கும் பித்தளையை அதிகமாக மதித்து வாங்குபவர் போல் அன்னிய மதங்களில் பிரவேசித்து ஆன்ம லாபத்தை யிழப்பதற்குக் காரணம் நமது நண்பர் கூறியபடி நாம் கீழ்ச் சாதியாரை இழிவாய் நடத்துவதும், நம்மக்களுக்கு மதக் கல்வியை யளிக்காததுமே யாகும்.

இப்போது கும்மாப்பட்டியில் நடப்பதாய் அவர் கூறும் சம்பவத்தைக் கேட்கும் ஒவ்வொரு உண்மை இந்துவின் மனமும் பதை பதைத்துத் துடிக்காதோ. சகோதர சகோதரிகளே! அறிவாளிகளே! இனியேனும் மேலே கூறியபடி சத்தியம் செய்து கொள்ளுங்கள்.

நோய் வந்தபின் அது நீங்க ஒளஷதம் புசித்தாலும் மறுபடி வராதிருக்க அந்நோய் வந்ததற்குக் காரணம் எதுவோ அதை யொழிக்க வேண்டுவது அத்தியாவசியமாகும். இன்றேல் அந்நோய் மறுபடியும் மறுபடியும் வந்துகொண்டே யிருக்கும். ஆகையால் அக்காரணத்தை நீக்காதிருப்பது அறிவாளிகளுக்கழகல்ல. இப்போது நமது மதத்தவர் வீணாய் அன்னியமதத்திற்போயழிவதற்குக் காரணம் நம் நண்பர் கூறிய இரண்டு விஷயங்களேயாகும். 1-வது நம்மக்களுக்கு நமது மதத்தைப் போதியாம லிருப்பது. 2-வது ஒரே தாயாகிய பாரத மாதாவின் வயிற்றிற் பிறந்த நம் சகோதரரில் தாழ்ந்த வகுப்பாரை யலட்சியமாகவும் அடிமைகள் போலவும் அவர்களுக்கு நம்மேல் வெறுப்புண்டாகும்படி நடத்துதல். அவர்களே அன்னிய மதத்திற் சேர்ந்தபின் சொற்ப கல்வியும் சுத்த உடையும் அணிந்து வந்தால் அவர்களைச் சமமாய் நடத்துகிறோ மல்லவா. அந்தோ! அவர்கள் கொஞ்சம் கல்வியும் நாகரீகமு மடையும்படி நாமே செய்து அவர்களை அன்போடு நடத்தினால் அவர்கள் அன்னிய மதத்தில் ஒரு போதும் போய்ச் சேரார்கள்.

இவ்வள வேனும் நாம் செய்யாவிட்டால் நாம் ஜீவகாருண்ய முடையோராக மாட்டோம்; நமது நாடும் க்ஷேமமடையாது. ஒற்றுமை யொற்றுமை யென்று வாயற் பறை யறைந்துகொண்டு நமக்குள்ளேயே பிரிவினைகளை யதிகமாக்கிக் கொள்ளும் மடமை நம்மை விட்டொழியு மட்டும் நாம் ஈடேற மாட்டோம். ஆகையால், நண்பர்களே! இந்த இரண்டு விஷயங்களையும் செய்ய முயல்வதை நமது முக்கிய கடமையாகக் கொள்ளவேண்டும். சீர்திருத்தம் சீர்திருத்தம் என்று மேடைமேல் நின்று பேசிவிடுவதால் மட்டும் ஒரு பயனு மடையோம். கருணாநிதி நம் கோரிக்கையை யீடேற்றியருள் புரியவேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறோம். ஓம் தத் ஸத்.

பத்திரிகாசிரியர்.

மாதர் மேன்மை.

அன்பு மிகுந்த சகோதர சகோதரிகாள்!

1. ஒருவனுக்குக் கற்புடைய மனைவி இருந்தால் இல்லாதது ஒன்றுமில்லை, நேர்மாறாக விருந்தாலோ எல்லா மிருந்தும் ஒன்று மில்லை—(திருவள்ளுவ நாயனார்.)

2. பூவுலகி லுள்ள நரகமும் சுவர்க்கமும் பெண்களில் அடங்கி யிருக்கின்றன—(டெனிசன்.)

3. நாணமுடைய பெண்கள் பெரும்பா லும் விநய முடையவர்களாகவும் குணவதிக ளாகவு மிருப்பார்கள்—ஆனால், நன்னெறி பயிலக் குணவதியின் சம்சர்க்கத்தைக் காட்டிலும் மேலான பாடசாலை எது—(ஹியூம்.)

4. நீ உன் இஷ்டப் பிரகாரம் எல்லாப் பந்தங்களேயும் நீக்கி நில்—என்றாலும் பெண் உன்னை ஆளுகிறாள்— (மூர்.)

5. ஒரு பெண்ணை ஆள ஒரு நாட்டை ஆளப் போதுமான சக்தியிலும் மிகுதியான சக்தி வேண்டும்—(பியூட்டு.)

6. பெண்கள் தேவாலயத்தில் ஞானிகளாகவும், வீட்டின் வெளியே தேவிகளாகவும், வீட்டில் நீலிகளாகவும் இருக்கிறார்கள்-(ஜி. வில்க்கின்ஸ்.)

7. கட்டழ கமைந்த ஒரு பெண் நகைக்கும் பொழுது அவளுடைய பணப்பெட்டி அழுகிறதெனக் கருதவேண்டும். பெண்களுக்கு அவர்களின் விருப்பப்படி நகைக்கவும், அழவும் சக்தி யுண்டு— (அடிசன்.)

8. பெண்கள் நேசமா யிருக்கும் பொழுதும், பகையாய் இருக்கும் பொழுதும் எதுவுஞ் செய்யப் பின்னிடையார்கள்—(கூலிக்கிபர்.)

9. பொன்னை நெருப்பைக் கொண்டும், பெண்ணைப் பொன்னைக் கொண்டும், மனிதனைப் பெண்ணைக் கொண்டும், சோதனை செய்யலாம்—(பெஞ்சமின் பிராங்கிளின்.)

10. புருஷர் அவர் இஷ்டப்படி சொல்லட்டும் செய்யட்டும், அவர்களை ஆள்வது பெண்களே யாம்—(பிக்கர்ஸ்டர்.)

11. உலகுக் கெல்லாம் அரசனே யாயினும், அவனே அவனது மனைவிக்குப் பிரியமான முதல் வேலையாள்—ஸ்ரீரங்கம். S. G. R.

12. ஆடவர் மனது எத்தகைய துன்பங்களால் வருத்தப்பட்டிருப்பினும் மாதர்களின் கடைக் கண் பார்வைக்கு அவரை அத்துன்பங்களிலிருந்து கறையேற்றச் சக்தியுண்டு—(கே.)

13. நமது தேச க்ஷேமத்தையும், நமது இருமைப் பயனையும் காப்பாற்றுவதற்காக, ஸ்திரீகள் அரசாள வேண்டிய விடம் குடும்பமாகிய மாளிகையே யாம்—(ஆறணி. K. M.)

14. அனாதியும் அழியாததும் சத்தியம் பொருந்தியதுமான நம் ஹிந்து மார்க்கத்தையும் நம் நாட்டின் தெய்வீகத் தன்மையையும் பாதுகாக்கும் காவலர் நமது பெண்மணிகளே யாவர்.—ஆறணி. K. M.

15. பெண்கள் தங்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு "கண்ணீர்" என்ற வாளாயுதத்தைக் கைக்கொண்டு வெற்றி யடைந்து வருகிறார்கள்.—உலகம்.

16. பெண்களின் ரகசியங்களைப் பிறர் அறிய முடியா வண்ணம் அவர்களின் அழகிய இருநேத்திரங்கள் போர்வீரர்களைப் போன்று காவல் புரிந்து வருகின்றன.—(உலகம்.)

(இவற்றிற் சில சில வருடங்களுக்கு முன்பு வெளிவந்த "பிரஜானுகூலன்" பத்திரிகையி லிருந்து எடுத்தெழுதப் பட்டவை.)

(இன்னும் வரும்.)

K. A. P. விஸ்வநாதன்,
3, தஞ்சைரோட், திருச்சி.

ஓர் முக்கிய அறிவிப்பு.

நமது அன்பார்ந்த சந்தாதாரர்கள் கீழ்க்காணும் நமது வேண்டுகோளைச் சற்று கவனித்து அவ்வாறே நடந்து கொண்டு நமக்குப் பேருதவி செய்யுமாறு கோரிக் கொள்கிறோம்:—

ஒவ்வொரு வருட முடிவிலும் அடுத்த வருட சந்தா பணத்தை முன் பணமாக அனுப்பி விடுவதால் சஞ்சிகை ஆலசிய மின்றிச் சந்தா தாரர்களுக்கு வந்து சேர்வதோடு, நமக்கும் எவ்வளவோ கஷ்டங் குறைகிறபடியால் அவ்வாறனுப்பும்படி கேட்டுக் கொள்ள வேண்டியதாகிறது. ஆனால் நாம் எவ்வள்வு தெளிவாய் எழுதினாலும் அனேகர் சந்தா நம்பரைக் குறிக்காமலும், தவறான நம்பர் குறித்தும் அனுப்பி விட்டு நமக்கு வீண் சிரமை கொடுப்பதோடு, பிறகு "சஞ்சிகை அனுப்பவில்லை. அல்லது பணம் அனுப்பியிருக்க வி. பி. யிலனுப்பி விட்டீர்கள்" என்று நம் மேலேயே குறை கூறுகிறார்கள். சந்தா நம்பரைக் குறிப்பிடுவதில் ஒரு கஷ்டமுமில்லை. சஞ்சிகையின் அச்சடித்த மேல் விலாசத்துண்டில் பெயருக்கு முன் சந்தா நம்பர் அச்சிட்டே யிருக்கிறது. சந்தா நம்பரை மறந்துள்ளவர்கள் கூட இதை வாசிக்கும்போது உடனே குறித்து வைத்துக் கொள்ளலாம். மேல் விலர்சத்தைக் கிழித்தெறிந்து விட்டிருந்தால் மறவாமல் அடுத்த மாத சஞ்சிகை வரும்போது அதைப் பிரிக்கு முன்பே நம்பரைப் பார்த்து குறித்து வைத்துக்கொள்ளலாம்.

ஆகையால் ஒவ்வொரு சந்தாதாரரும் தயவுசெய்து கீழ்க்குறிப்பிட்ட விஷயங்களைக் கவனத்தில் வைத்து அவற்றின்படி நடந்து கொண்டு சஞ்சிகையின்மேல் தங்களுக்குள்ள மெய்யன்பை வெளியிடுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

(1) மணியார்டர் கூப்பனில் சந்தா நம்பரையும், முழுவிலாசத்தையும் மட்டும் தெளிவாக எழுத வேண்டும். சமாசாரம் "6-வது வருட சந்தாவை யனுப்பி யிருக்கிறேன்" என்றுமட்டும் எழுதினால் போதும்; அதிக வீண்வார்த்தைகளை யெழுதி நம்பர் பெயர் முதலியவை விளங்கா வண்ணம் செய்து விடலாகாது.

(2) இரண்டு மூன்று பேர் சேர்ந்தனுப்பவதாயின் மணியார்டரில் அதை யனுப்பு கிறவர் தம் நம்பர் பெயரைமட்டும் எழுதிவிட்டு "இத்துடன் விவரம் கடிதம் அனுப்பியிருக்கிறேன்" என்று எழுதி விட வேண்டும். அதே தினம் மற்ற சந்தாதாரர்களின் நம்பர்கள் விலாசங்கள் இவற்றை வேறொருகடிதத்தில் தெளிவாக எழுதியனுப்ப வேண்டும்.

(3) புதிதாய்ச் சேர்வோர்களாயின், இந்த நபர்கள் புது சந்தாதாரர்கள் என்று குறிப்பிட வேண்டும்.

(4) சந்தா நம்பர் சரியாகத் தெரியாதவர்கள் விலாச மட்டும் எழுதிப் பணம் அனுப்பலாகாது. அவர்கள் பேசாமலிருந்து வி. பி. வரும் போது பணங்கட்டிப் பெற்றுக்கொண்டால் நமக்கு மிக்க உதவி செய்ததாகக் கருதுவோம். நம்பரைக் குறிக்காமலனுப்பி விட்டுப் பிறகு சஞ்சிகை வி. பி. யில் வந்த தென்று குறைகூறலாகாது. அத்தகையோர் வி. பி. நஷ்டத்தை ஒப்புக் கொள்ளவேண்டும்.

(5) இரண்டு மூன்று பேருக்குச் சேர்த்துப் பணம் அனுப்புவோர்கள் அதில் நம்பர் குறிக்கப் படாதவர்களுக்குப் பணம் அனுப்பினுல் மேல் 4-வதில் கண்ட விதியையே ஒப்புக் கொள்ள வேண்டும்.

(6) 1920ஞ ஜூலைமீ 10வுக்குள் பணம் நம்மிடம் வந்து சேரும்படி அனுப்பாதவர்களுக் கெல்லாம் வி. பி. யில் சஞ்சிகை யனுப்பப் படும். வி. பி. அனுப்பப்பட்ட பின் பணம் நம்மிடம் வந்தால், அத்தகை யோர் வி. பி. நஷ்டத்தை யொப்புக் கொள்ள வேண்டும்.

(7) பினங் சிங்கப்பூர் முதலிய அன்னிய நாட்டுச் சந்தா தாரர்களில் வி. பி. வராத இடங்களிலுள்ளவர்கள் (பினங், சிங்கப்பூர், மலாக்கா இந்த மூன் றிடங்களுக்கு மட்டுமே வி. பி. வரும்) ஜூலைமூ 4வுக்குள் சந்தாத் தொகை இங்குவந்து சேரும்படி போஸ்டல் ஆடர் அல்லது மணியாடர் அனுப்பிவிட வேண்டும். அங்கிருந்து ஜூன்மீ 1வு முதல் 15—16-ம் தேதிக்குள் அனுப்பி விடவேண்டும். மேல் குறித்த 3 நகரங்களிலுள் ளவர்களில் முன்பண மனுப்ப விரும்புவோரும் அவ்வாறே யனுப்பி விட வேண்டுமாய்க் கோருகிறோம்.

(8) விசேஷக் குறிப்பு—மேல் குறித்த தவணைக்குள் சரியான சந்தாநம்ப ரோடு சந்தாத் தொகையை யனுப்பி விடுவோர்களுக்கு மட்டும் துன் முகி வருடத்திய ஆனந்தபோதினி சர்வமுகூர்த்த பஞ்சாங்கம் ஒன்று இனுமாக அனுப்பப்படும். பத்திராசிரியர்.

கற்கோட்டை— நாவல்.

(440-ம் பக்கத் தொடர்ச்சி.)

அவர்களோடு வந்த மூன்று வீரர்களில் தலைவனான லெப்டினென்ட் கங்காலிங் என்பவன், மூதாட்டியை நோக்கி "சீமாட்டியே! நான் தங்க ளிடம் இரண்டொரு வார்த்தை பேசவேண்டும்" என்றான். அச்சீமாட்டி யுடனே அவனை யொரு தனி அறைக்கு அழைத்துச்சென்றாள். இருவ ரும் ஆசனங்களிலமர்ந்ததும் கங்காலிங் தன் ஜேபியிலிருந்த அரக்கு முத் திரையிட்ட கடிதத்தை யெடுத்து அம்மூதாட்டியிடமளித்தான். அம்மூ தாட்டி அதை மிக்க பக்தியோடு கையிலேற்றுக் கண்களிலொற்றிக் கொ ண்டு அதைப் பிரித்துப் பார்த்துவிட்டு கங்காலிங் முகத்தை நோக்கி னாள்.

கங்கா.—அம்மா! அதில் இரண்டு சமாசாரங்கள் இருக்கின்றன. முதலா வது, இப்போது கொண்டுவரப்பட்ட கன்னிகையை மிக்க இரகசிய மாகவும், ஜாக்கிரதை யாகவும் பாதுகாத்து வரவேண்டும். இரண்டா வது மிக்க நுட்பமான விஷயம்; அதாவது: ஷண்பகவல்லியைப் பற் றியது. இராணி யவளை எனக்குத்தான் மணம் செய்து கொடுக்கப் போகிறாள். ஆ! அந்த ஸர்தார் சத்தியசேகரன் மறுபடி இராணி யின் அன்பைப் பெற்றுக்கொண்டான். இராஜநாயகம் உதவியால் அது நடந்தது. இப்போது சிறைப் படுத்தப் பட்ட காப்டென் தின கரனுடைய உத்தியோகம் அவனுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

மூதாட்டி.—ஆ! அப்படியா? இப்போது சத்தியசேகரன் எங்கிருக்கிறான்?

கங்கா.—அது தெரியாது. பெரும்பாலும் இந்திரபுரி சேர்ந்திருப்பான். ஆயின் அவன் தந்திரசாமர்த்தியத்தால் இவளை இங்கிருந்து கொண்டு

போய் விடுவான். ஆகையால் இராணி யென்னை இங்கனுப்பி னுள். இக்கன்னிகை பேசாமல் மரியாதையாய் ஒப்புக்கொள்ளா விட்டால், பலவந்தத்தாலேனும் நான் இங்கு வந்து சேர்ந்த 24-மணி நேரத்திற்குள் அவளை நான் மணம்புரிந்துகொள்ள வேண்டுமென்பது இராணியின் கட்டளை.

மூதாட்டி.—ஷண்பகவல்லி இராணியின் கட்டளையைப் பொறுமையா யொப்புக் கொள்வாள்.

கங்கா.—அப்படியானுல் எனக்கு அழகிய மனைவியும், வருஷம் 200 பவுன் உபகாரச் சம்பளமும், காப்டென் பட்டமும், ஒரு துறைமுகக் கோட்டையின் கவர்னர் பதவியும் கிடைக்கும். இந்த ஷண்பகவல்லி எப்படி இவ்வாறு திடீரென்று குணம் மாறி இராணியுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதாய் ஒப்புக்கொண்டாள்.

மூதாட்டி.—என் இராணி இரண்டுபேரை யிங்கனுப்பியது உனக்குத் தெரியாதோ. அவர்கள் இன்னும் போகவில்லை. போஜனம் செய்து கொண்டிருக்கிருர்கள்.

கங்கா.—இரண்டுபேரையா ? எப்போது ? என் ?

மூதாட்டி.—இரண்டு சகோதரர்கள் ஷண்பகவல்லியைக் கண்டு பேசவந்தார்களே. இரண்டுமணி நேரத்திற்கு முன்பே வந்தார்கள்.

கங்காஸிங்.—(கலவரமடைந்து) சகோதரர்களா ? அவர்கள் எப்படி யிருக்கிருர்கள்? கடிதம் கொண்டுவந்தார்களா ? எனக்குத் தெரிந்து யாரும் அனுப்பப்பட வில்லையா.

இதைக்கேட்கவே மூதாட்டியும் சந்தேகமும் கலவரமுமடைந்து, சகோதரரின் அடையாளங்களைக் கூறி "அவர்கள் இராணியின் கணையாழியையே அடையாளமாகக் கொண்டுவந்தார்கள்" என்ருள்.

இதைக்கேட்ட கங்காஸிங் துள்ளியெழுந்து, "அடடா! மோசம், மோசம்; அவர்கள் துரோகிகள். கணையாழி களவாடப்பட்டது. அவர்கள் திரவியசிங்கம் பிரபுவின் சகோதரர்கள். அவர்கள் எங்கே யிருக்கிருர்கள் ? அவர்கள் என்னகாரணமாய் ஷண்பகவல்லியை வந்து கண்டார்கள். ஏதோ பெருஞ்சூது நடக்கிறது. சத்திய சேகரன் பெரும்பாலும் இதற்குக் காரணமா யிருக்கவேண்டும். இப்போதிவர்களைப் பிடிக்கவேண்டுமே. இவர்களை விசாரணையின்றித் தூக்கிற்போடவேண்டும் என்றுகட்டளை" என்ருன்.

இவைகளைக் கேட்டதே அம்மூதாட்டி சொல்லொணுக் கோப மடைந்து "இவர்களைத் தூக்கிற் போடவேண்டும். இப்போது அவர்கள் ஒரு அறைக்குள் இருக்கிருர்கள். நீங்கள் வந்தது அவர்களுக்குத் தெரியாது. அந்த அறையில் தோட்டப் பக்கம் ஒரே சாளரமிருக்கிறது" என்ருள்.

கங்காஸிங்.—"அவர்களைத் தப்பவிடக்கூடாது. சண்டையில் சாகும்படிக்கும் இடந்தரலாகாது. பிடித்துத் தூக்கிலேயே போட வேண்டும். அவர்கள் இரண்டே பேராயினும் துணிகரமாய்ச் சண்டை யிடுவார்கள். சாளரத்தின் பக்கமாய்ப் போகாதபடிச் சிலரைக் காவல் வைத்துவிட்டுச் சிலர் கதவின் வழியாய் அறைக்குள் நுழைந்து பிடித்துக் கொள்ள வேண்டும்" என்ருன்.

அம்மாது.—"ஆம், ஆம். என் ஆட்களை ஆயுதங்களோடு உதவியாகக் கொடுக்கிறேன். அத்துரோகிகள் எப்படியும் பிடிக்கப்படவேண்டும்" என்றாள்.

இதற்கிடையில் புதிதாகக் கொண்டுவரப்பட்ட மாது வேலைக்காரியால் மேல்மாடிக் கழைத்துக்கொண்டு போகப் பட்டாள். அங்கு ஒரு தாழ்வாரத்தில் வரிசையாய் நான் கறைகள் இருந்தன. அவற்றில் ஒவ்வொன்றிலும் சயனிக்க உள்ளறை யொன்றிருந்தது. வேலைக்காரி அந்த நான்கு அறைகளில் ஒன்றில் அம்மாதை விட்டுவிட்டு, ஒரு தீபம் வைத்துவிட்டு உனக்கு ஏதாவது வேண்டுமோ வென்றாள். அம்மாது வேண்டாமென்றதும் அவள் போய்விட்டாள். யறுமிடம் பக்கத்து அறையிலிருந்த ஷண்பகவல்லி யாரோ பாபம் புதிதாகக் கொண்டுவரப்பட்டு நம்போல் சிறை வைக்கப்பட்டதுபோல் காண்கிறதென்று அறிந்து உடனே அந்த அறைக்குள் சென்றாள்.

தன்முன் வந்து நிற்கும் கெம்பீர ரூபியாகிய ஷண்பகவல்லியைக் கண்ட அம்மாது திடுக்கிட்டுக் கலவரமடைந்தாள். அதை யறிந்த ஷண்பகவல்லி "நீ பயப்படாதே; நான் சினேகி யென்று நம்பு. நீயும் சிறையாகத்தான் கொண்டுவரப்பட்டிருக்கிறாயோ?" என்றாள்.

அம்மாது.—"அப்படியானால் நீ யிங்குச் சிறையாகவாவிருக்கிறாய்?" என்றாள்.

ஷண்பக.—ஆம்; அந்தக் கொடிய அரசியால்; அதுவும் கௌரவமாய் ஒரு உத்தமன்மேல் காதல் கொண்டதற்காக. கிழ இராணி காதல் கொண்டிருந்த ஆள் மேல் நான் காதல் கொண்டது பெரிய குற்றமாய் விட்டது. என் பேர் ஷண்பகவல்லி.

புதுமாது.—"என் பெயர் அரியநாயகி. நான் என் மனமறிந்தவரையில் ஒரு காரணமுமின்றி இம்சிக்கப்படுகிறேன். அந்தக் கணையாழியைக் களவாடியதிலிருந்து ஆரம்பம்" என்றதே,

ஷண்பகவல்லி எந்தக் கணையாழி யென்று, அன்று நடந்த தன் சங்கதியைக்கூறியதும் சகோதரர் இருவரும் வசந்தமாலையில்தானிருக்கிறார்களென்று அரியநாயகி யறிந்துகொண்டாள். அவள் உடனே "அந்தோ! அவர்களுக்கு ஆபத்து ஆபத்து. இராணியின் படைவீரர்களில் லெப்டினென்ட் கங்காலிங்கும் வேறு இருவரும் இங்கு வந்திருக்கிறார்களே! ஐயோ! அந்த உத்தமர்களைப் பிடித்துக்கொள்வார்களே! அவர்களுக்குக் கொஞ்சம் எச்சரிக்கை செய்யக் கூடுமானால்..." என்று மிக்க துயரத்தோடும் ஆத்திரத்தோடும் மொழிந்தாள்.

ஷண்பகவல்லி "கட்டாயம் என்ன வந்தாலும் சரி; இதோ ஒரு நொடியில் போய் எச்சரிக்கை செய்துவிட்டு வருகின்றேன்; நீ தைரியமாயிரு" என்று கூறிவிட்டுச் சென்றாள்.

ஷண்பகவல்லி துரிதமாய் மாடியைவிட்டிறங்கி உக்கிராண அறை வழியாய்ச் செல்லும் போது, அங்கு ஒரு வேலைக்காரன் எதிர்ப்பட்டான். கன்னிகை "எங்கே சீமாட்டி" என்றாள். அவன், "போஜன அறைக்குச் சென்றவர்கள் இன்னும் வரவில்லை" என்றதே, ஷண்பகவல்லி "சரி, ப

போம்" என்று நடந்தாள். அதற்குள் வேலைக்காரன், "அம்மா! அதோ வருகிறார்கள்; குரல் கேட்கிறது" என்றான். கன்னிகை திரும்பிப் பாராமல் சென்று நாம் முன் கூறியபடி சகோதரர்களுக்கு எச்சரிக்கை செய்து விட்டாள். முன் தோட்டத்திற்குச் செல்லத் தன்னிடம் வேதநாயகி கொடுத்த தோட்டக் கதவின் சாவி தன்னிடமே யிருந்ததால், அதையவர்களிடம் கொடுத்து விட்டாள்.

நாம் முன்கூறியபடி சகோதரர்கள் சாளரத்தில் போர்வீரர்களைக் கண்டதே பின் திரும்பினார்கள். அதே சமயம் வாசற்படியின் வெளியில் ஆட்கள் சந்தடி கேட்டதும் தங்கள் வாட்களை யுருவிக்கொண்டு கதவைத் திறந்து வெளிப்பாய்ந்தார்கள். அங்கு வேதநாயகி யாட்களில் ஆறுஎழுபேர் தைரியசாலிகள் கத்திகளோடிருந்து எதிர்த்தார்கள். அம்மூதாட்டியும் அவர்களோ டிருக்கிறாள். அப்போதுதான் சகோதரர்களுக்கு எச்சரிக்கை செய்து விட்டுத் திரும்பிய ஷண்பகவல்லி அவர்களிடம் சிக்கிக்கொண்டாள். இராக்ஷசிபோல் கோபங்கொண்டிருக்கும் அம்மூதாட்டி அவள் தோளை முறட்டுத் தனமாய்ப் பிடித்து "அடீ சிறுக்கி! இவர்களுக்கு எச்சரிக்கையா செய்யவந்தாய்" என்று அலட்டினாள். மூத்த பிரபு "எ துஷ்டி! நீ ஸ்திரீ ஜாதியென்றுவிட்டிருக்கிறேன். உடனே அம்மாதின் தோளை விடாவிட்டால் உன் கை கீழே விழுந்ததுபார்!" என்று வாளை யோங்கினார். அவள் உடனே தோளை விட்டுவிட்டுத் தன் பின்னாலிருந்த துர்க்கிக்குச் சமிக்கைசெய்ய அவள் உடனேஷண்பகவல்லியைப் பிடித்துத் தூக்கிச் சென்றாள். ஷண்பகவல்லி "பிரபுக்களே! இரக்கமின்றி வெட்டித் தள்ளிக்கொண்டு போய்விடுங்கள்" என்று கூவினாள்.

பிரபுக்களிருவரும் இரண்டு நிமிடத்தில் இருவரை யெமனுலகிற் கனுப்பிவிட்டு இரண்டு மூன்று பேர்களுக்கு நல்ல காயமுண்டாக்கினார்கள். அச்சமயம் வெளியில் இருந்த கங்காலிங்கும் அவன் ஆட்களும் சாளரவழியாயேறி உள்வந்து பின்புறம் தாக்க ஆரம்பித்தார்கள். கங்காலிங் "அவர்களைக் கொல்லாமல் பிடியுங்கள்! தூக்கு மரத்தில் தொங்க வேண்டியவர்கள்" என்றான். மூத்த பிரபு சட்டென்று திரும்பி அல்ப நாயே! தூக்குமரமாடா! என்றதும் கத்தியை யோங்கி வீசினார். அதனால் கங்காலிங்கின் வலதுகரம் நல்ல காயம்பட்டு இரத்தம் பீறிட்டுத் தொங்கி விட்டதோடு, அவன் கத்தி கீழே விழுந்து விட்டது. ஆயினும் மற்ற பேர்கள் ஏககாலத்தில் பாய்ந்து மேல் விழுந்து பிரபுக்களிருவரையும் பிடித்து நிராயுதபாணிகளாக்கி விட்டார்கள். அவர்களிட மிருந்த கணையாழியும் பிடுங்கிக்கொள்ளப்பட்டது. சோதனையில் ஷண்பகவல்லி கொடுத்த சாவியும் அகப்பட்டுக்கொண்டது.

கைநோயால் அவஸ்தைப்படும் கங்காலிங் இவர்கள் வந்த விஷயத்தை யெப்படியேனு மறியவேண்டுமென்று சிந்தித்துக் கொண்டு "கைதிகளை அறைக்குள் அழைத்து வாருங்கள்" என்றான். அவ்வாறே அவர்கள் கொண்டு போகப்பட்டபின், கங்காலிங், வேதநாயகி, போர்வீரர் இவர்கள் மட்டும் அறைக்குள் ளிருந்துகொண்டு கதவை மூடிக்கொண்டார்கள்.

(தொடரும்)

ஆரணி குப்புசாமி முதலியார்

"ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்

ரௌத்திரிஞு ஆடிமீ — சாலிவாகனம் 1843 - கலியுகாதி 5022

பசலி 1329-30 — கோல்லம் 1095-96 - ஹிஜரி-1338-39

இங்கிலீஷ் 1920-ஞு ஜூலைமீ — ஆகஸ்டுமீ

ஆடிமீ	ஜூலைமீ	வாரம்	திதி.	நக்ஷத்திரம்.	யோகம்.	விசேஷங்கள்.
1	16	வெ	பிர-44-39	புன-4-31	சி-4உத்	வாகனமேற கர்ணபரண
2	17	சனி	து-30-19	பூச-0-45	ம-56அ	பிரயாணம்
3	18	ஞா	தி-34-35	மக-54-51	ம-54சி	கூபாரம்பம் கட்டடம்
4	19	தி	ச-30-48	பூர-53-15	சி-60	சித்திரம் யந்திரவேலை
5	20	செ	ப-27-47	உத்-53-13	அ-சி60	பிரயாணம், விவசாயம்
6	21	பு	சஷ்-29-6	அஸ்-53-11	ம-53சி	விவசாயம்; நந்தவனம்
7	22	வி	சப்-26-31	சித்-55-30	சி-55அ	சீமந்தம் மீனம்பும்சவனம்
8	23	வெ	அ-26-14	சுவா-58-8	சித்-60	பிரயாணம், முடிவாங்க
9	24	ச	நவ-28-10	விசா-60-0	சித்-60	தடாகம் கட்டடம்
10	25	ஞா	தச-31-16	விசா-2-33	உத்-மர	கரிநாள்
11	26	தி	ஏ-35-19	அனு-8-0	சித்-60	பும்சவனம்
12	27	செ	து-40-14	கே-13-54	உ-13அ	பிரயாணம்
13	28	பு	தி-45-5	மூல-20-31	ம-20அ	பூராடத்தின்படி
14	29	வி	ச-50-5	பூரா-26-51	சித்-60	சீமந்தம், பும்சவனம்
15	30	வெ	○-54-26	உரா-32-55	சி-32ம	ஆபரணம்,மகுடாபிஷேக
16	31	ச	பிர-58-2	திரு-38-30	சித்-60	கிழங்குகொடி நட
17	1920ஞு ஆகஸ்டுமீ 1	ஞா	து-60-0	அவி-42-45	ம-42சி	பிரயாணம் யந்திரவேலை
18	2	தி	து-0-14	சத-45-53	சி-45ம	சீமந்தம், வியாபாரம்
19	3	செ	தி-1-18	பூட்-47-49	ம-47அ	கிழக்கு பிரயாணம்
20	4	பு	ச-1-11	பஞ்-53-51	சி-60	சீமந்தம், வியாபாரம்
21	5	வி	ச-57-27	ரே-47-59	சி-47அ	கிழங்கு உயர்ந்த மரங்கள்
22	6	வெ	சப்-53-47	அசு-46-25	அசி-60	வியாபாரம் கர்ணபரணம்
23	7	ச	அ-48-18	பர-44-1	சி-44அ	
24	8	ஞா	நவ-44-1	*கிரு-40-46	சி-60	
25	9	தி	தச-38-20	ரோ-37-3	அ-60	
26	10	செ	ஏ-32-17	மிரு-32-59	சி32ம	
27	11	பு	து-26-5	திரு-28-48	சித்-60	
28	12	வி	தி-20-2	புன-24-42	அமி-60	
29	13	வெ	ச-14-8	பூச-20-10	உத்-மர	
30	14	சனி	●-8-32	ஆயி-17-29	ம-17-அ	
31	15	ஞா	பிர-3-56	மக-14-41	ம-14-சி	

	கே		
	4-சி-குரு 22-சிங்-சுக் 23-மேகுஅ		சூ-சு புத
			குரு சனி

PRINTED AND PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR AT THE "ANANDA BODHINI" PRESS, 15, VENKATESA MAISTRY STREET, MAD